மில்க் வைற்
நீல சோப்
மேல் உறைகளைச் சேகரியுங்கள்
வழமைபோல்
50 மேல்உறைகளுககு
ஒரு அழகான சாக்குபை
இனுமாகக் கொடுக்கப்படும்.

★ ★
Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

ஈழநாடு
வார மலர்.

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 179

பராபவ ஆடி 22 ரபி: ஆகி 19 (8-8-66) திங்கட்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# 10 பேர் கோர மரணம்! 15 பேர் படுகாயம்

## லொறியில் சென்ற கதிர்காம யாத்திரிகர்களின் பரிதாப முடிவு

கொழும்பு, ஞாயிறு

**யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு கதிர்காமம் சென்றுகொண்டிருந்த லொறியொன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். மரணமானவர்களில் சாரதியும் ஒருவர்.**

காயமடைந்த 15 பிரயாணிகள் அருகாமையிலுள்ள ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்தக் கோரச் சம்பவம் திஸ்ஸ--ஹம்பாந்தோட்டை பாதையில் வீரவில்ல என்ற இடத்தில் நடைபெற்றது. விபத்து ஏற்பட்டபோது லொறியில் 29 பிரயாணிகள் இருந்தனர். இவர்கள் அனைவரும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள்.

பாணந்துறையில் இருந்து யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டுசென்ற இந்த லொறி வீரவில்ல என்ற இடத்தில் பாதையைவிட்டு விலகி குடைசாய்ந்தது. பிரயாணிகளில் 10 பேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து உயிர்நீத்தார்கள் என்று கொழும்புக்கு கிடைத்த அவசரச் செய்திகள் கூறின. காயமடைந்தவர்களில் 15 பேர் அருகாமையிலிருக்கும் ஆஸ்பத்திரிகளுக்கு விரையப்பட்டனர். இவர்களிலும் சிலரின் நிலைமை கவலையளிப்பதாகவிருக்கிறதென்று அறியப்படுகிறது.

மரணமானவர்களின் சடலங்களை அடையாளம் கண்டுபிடிக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஸ்தலத்தில் பொலிஸ் காவல் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## ஜி.ஜி.பொன்னம்பலம் மீண்டும் தலைவரானார்



யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் புதிய தலைவராக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். நேற்று பிற்பகல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடந்த வருடாந்தக் கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது.

பொதுச் செயலாளராக திரு எம் சிவசிதம்பரம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். உப-தலைவர்களாக திருவாளர்களெஸ் ஆர் கனகநாயகம், சி சிவபாதசுந்தரம், எஸ் சரவணமுத்து, எஸ் பொன்னையா. எஸ் திஸ

(12-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் கனிஷ்ட பல்கலைகழகம் ஜனவரியில் அமைக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

அடுத்த ஜனவரியில்யாழ்ப்பாணத்தில் கனிஷ்ட பல்கலைக்கழகமொன்று நிறுவப்படவிருக்கிறது.

காலி, கேகாலை, குளியாப்பிட்டி, தெகிவளை ஆகிய இடங்களிலும் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன இந்த கனிஷ்ட பல்கலைக்கழகங்களுக்கு ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இருபத்தைந்து பாடங்களில் இந்த மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற பாடங்களைத் தெரிவுசெய்துகொள்ளலாம். பல்கலைக்கழக பிரவேச விண்ணப்பதேதி முடிவடைந்தபின் கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும். மூன்றுபாடங்களில் விசேஷ தகைமையுடன் ஜி. ஸி. ஈ பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் சேரலாம். கனிஷ்ட பல்கலைக்கழகங்களுக்கு நூறு ஆசிரியர்களும் ஐந்து அதிபர்களும் நியமிக்கப்படுவதற்கு நிதிஒதுக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரமும் பெறப்பட்டுவிட்டது.

## 15 மேலதிக பஸ்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டை யொட்டி நேற்று நள்ளிரவு 12 மணிவரை யாழ்ப்பாணத்திலிருந்து எல்லாப்பகுதிகளுக்கும் பஸ்சேவை நடைபெற்றது. இன்றும் நாளையும் நள்ளிரவு 12 மணிவரை எல்லா இடங்களுக்கும் பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வவுனியா, யாழ்ப்பாணம் முல்லைத்தீவிற்கு தினமும் 3 விசேஷ சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நகர மண்டபத்திலிருந்து கட்சித் தலைமைக்காரியாலயத்திற்கும் பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## இரண்டு வைபவங்களில் தமிழரசார் பங்குபற்றுவர்

### பிரதமர் வருகை பற்றி டாக்டர் நாகநாதன் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

நாளை யாழ்ப்பாணம் வரும் பிரதமருக்கு ரயில் நிலையத்தில் அளிக்கும் வரவேற்பிலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு பிரதமர் வரும்பொழுது அளிக்கப்படும் வரவேற்பிலும்தான் தமிழரசுக் கட்சி எம். பி. க்களும் செனட்டரும் கலந்துகொள்வார்களென தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ எம் வி நாகநாதன் நேற்று விடுத்த ஓர் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சித் தலைவரும் நல்லூர் எம் பி யுமான டாக்டர் இ எம் வி நாகநாதன் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் கௌரவ பிரதமமந்திரி யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகிறார். பிரதமரின் வருகை பலவிதங்களிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இச்சந்தர்ப்பத்தில் பிரதமமந்திரிக்கு ஏற்ற வரவேற்பளிக்க யாழ்ப்பாண மக்களில் எல்லாப் பகுதியினரும் ஆவலாக உள்ளனர்.

நாளை 9-ந் திகதி பிரதமரின் வருகையை ஒட்டிய சூழ்நிலைகள் அவரை வரவேற்பதில் சகலபகுதிமக்களும் கலந்துகொள்ளக் கூடியதாக இல்லை.

### ரயில்நிலைய வரவேற்பு

பிரதமருக்கு யாழ்ப்பாண ரயில்நிலையத்தில் அளிக்கப்படும் உத்தியோகபூர்வமான வரவேற்பில் எமது கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பார்லிமெண்ட் பிரதிநிதிகளும்செனட்டர்களும்கலந்து கொள்வார்கள்.

ரயல்நிலைய வரவேற்புக்குப்பின் நாம் அடுத்துக் கலந்துகொள்ளும் ஒரேயொரு வைபவம் பிரதமர் நல்லூர்க் கந்தசுவாமிகோயிலுக்கு வருகைதருவதேயாகும்.

### சந்திக்கும்படி பிரதமர் கோரினார்

தாம் நல்லூர்த் தொகுதிக்குவரும்பொழுது நல்லூர்த் தொகுதியென்ற முறையில்

(12-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர்கள் விற்றனர்!

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றைய தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டின்போது கட்சித் தொண்டர்கள் நான்குவர்ண கட்சித்துவாய்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களின் படங்களும் விற்பனை செய்யப்பட்டன.

## காங்கேசன்துறையில் திடீர் மழை!

### அரசாங்கத்திற்கு ரூ. 6 ஆயிரம் நஷ்டம்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன் துறையில் இன்று காலை பெய்த மழையினால் அரசாங்கத்திற்குச் சுமார் ஆறாயிரம் ரூபாய் வரை நஷ்டமேற்பட்டுள்ளது. இன்று காலை எதிர்பாராதவகையில் சுமார் ஒரு மணி நேரம் பெய்த மழை காரணமாக காங்கேசன்துறைத் துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வெளியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 300க்கும் அதிகமான அரிசி மூடைகளில் பெரும்பாலானவை பழுதடைந்துவிடும் எனத் தெரிகிறது. இதனாலேயே அரசாங்கத்திற்கு நஷ்டமேற்படவிருக்கிறது. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சேவைச் சமசமாஜத்தின் கவலையீனமே அரிசிமூடைகள் மழையில் நனைவதற்குக் காரணமென உணவுப்பகுதி அதிகாரியொருவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வில் ஒளி; 10 வருட இருள் அகன்றது

## பிரச்னைகள் நிரந்தரமாக தீர சர்வகட்சி வட்டமேசை மாநாடு

### தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி.யின் தலைமைப் பேருரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மொழிப்பிரச்னைக்குத் திருப்தியான, நேர்மையான, நிரந்தரமான தீர்வுகாணப்பட வேண்டுமானால் அந்தப் பிரச்னையை கட்சி அரசியலுக்கு அப்பால் நீக்கி வட்ட மேசை மகாநாடொன்றில்தான் தீர்க்கமுடியுமென்பது எனது நம்பிக்கை. ஒரு மொழி, ஒரு நாடு என்ற எதிர்க்கட்சியினரின் போக்கு இந்த மகா நாடு நடைபெற சாத்தியமில்லாது செய்துவருவதாயினும் விரைவில் அவர் கள் சமரச, அரசியல் விவேக நடத்தையைப் பின்பற்றுவார்களென நம்பு வோம்.

## இராமநாதன் இந்துப்பல்கலைக்கழகம்

சிங்களக்கட்சிகள் அங்கீகரித்தபின்னரும், பூர்வாங்கச் செலவுகளுக்கு தர்மச் சொத்து நிதி போதியளவு இருந்தபோதும் ஒரு இந் துப் பல்கலைக்கழகத்துக்கு ஏன் எதிர்ப்பு இருக்கவேண்டுமென்பது நம்பமுடி யாமலுள்ளது இந்துப்பல்கலைக்கழகத்தில் சாதி. சமய,மத பேதம் காண்பிக் கப்படமாட்டாது. அடையாள மான்யம் ஒதுக்குவதுடன் நில்லாது அதை அமைப்பதற்கு விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென நம்புகி றோம்.

வருடத்திய வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கான அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டது. இந்த வருட ஆரம்பத்தில் இவ்வித பல்கலைக்கழகம் ஸ்தாபிப்பதற்கான வாக்குறுதியை செயல் படுத்துமாறு நான் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தேன். இந்து மாணவர்களுக்குமட்டுமே இந்துப்பல்கலைக்கழகம் பயனளிக்குமென்ற தவறான கருத்துப் பரப்பப்பட்டுவருகிறது. இந்தியாவிலும் உலகின் இதர பகுதிகளிலும் இயங்கிவரும் இதுபோன்ற சமயரீதியிலமைந்தபல்கலைக் கழகங்களின் சரித்திரமும், அமைப்பு விதிமுறைகளும் இதர மதத்தைச்சேர்ந்த மாணவர்கள்மீது எவ்வித பாகுபாடும் காட்டப்பட மாட்டாதுஎன்பதை நிரூபிக்கின்றது. இந்துப்பல்கலைக்கழகம் எல்லோருக்கும் இன மத பேதமின்றி சேவைபுரிவதாக இருக்கும். இந்தப் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கும் நியமனங்கள் பெறுவதற்கும் எந்த மதத்தைச் சேர்ந்தவருக்கும்உரிமையிருக்கும். சகல சிங்களக் கட்சிகளாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்துப் பல்கலைக்கழகத்துக்குஎதற்காக எதிர்ப்பு இருக்கவேண்டும் என்பது தான் விளங்கவில்லை இந்துப் பல்கலைக்கழகம் ஆரம்பமாகி இயங்குவதற்கு இராமநாதன் தர்மச்சொத்து, மழவராயர் தர்மச்சொத்து, நாவலர் தர்மச் சொத்து ஆகியவை இருக்கின்றன. இவை இந்துக் கல்வி வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. தெற்கில் வித்தியாலங்கார, வித்தியோதயா பௌத்த பல்கலைக்கழகங்கள் இருப்பது போன்றே யாழ்ப்பாணத்தில் நிறுவப்ப

(12ம் பக்கம் பார்க்க)

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி. ஜி பொன்னம்பலம் இன்று காலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 21-வது ஆண்டு மகாநாட்டிற்குத் தலைமை வகித்து தலைமைப்பேருரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண பொருளாதார அபிவிருத்திக்கும் திரு. பொன்னம்பலம் தமது தலைமையுரையில் சில யோசனைகள் தெரிவித்தார். விவசாயம், கைத்தொழில், மீன்பிடி அபிவிருத்திக்கு குறுகியகால நீண்டகாலத் திட்டங்கள் வேண்டுமென்று அவர் கூறினார். சமூகஏற்றத்தாழ்வுகளைஒழிக்க சட்டம்கொண்டு வரப்படவேண்டுமென்றும் திரு. பொன்னம்பலம் சொன்னார்.

நகரமண்டபத்தில் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்த 'இராமநாதன் அரங்கில்' நின்று திரு. பொன்னம்பலம் தலைமைப்பேருரை நிகழ்த்தினார். அவர் மேலும் கூறியதாவது:-

சென்ற வருடம், நாட்டுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் நிம்மதியையும் நம்பிக்கையையும் தோற்றுவித்துள்ளது. தேசிய அரசாங்கம் ஜனநாயக சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு நல்ல வாய்ப்பளித்துள்ளது நாட்டில் பொருளாதார சுதந்திரத்துக்கான அடிப்படையைத் தோற்றுவித்துள்ளது. சிறுபான்மை இனத்தவரின் மொழி, மதம் ஆகியவற்றை சமமாக நடத்தவும் பாகுபாடின்றி சமசந்தர்ப்பம் வழங்கவும் தேசிய அரசாங்கம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது பொருளாதாரத்துறையிலும் இதர துறைகளிலும் தமிழ்மக்களையும் அரசாங்கசேவை ஊழியர்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு வகுப்புவாதமற்றமுறையில் சில திட்டங்களை அமுல்நடத்தி அரசாங்கம் தனது கொள்கையை வெளிப்படுத்தியுள்ளது.

### இருள் சூழ்ந்திருந்தது

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வருமுன்னர் பத்து வருடங்களாக இருளும் நம்பிக்கையற்ற ஒரு சூழ்நிலையும் சிறிதளவு அரசியல் ஞானமுமற்ற ஓர் ஆட்சியும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு மட்டுமல்ல நாடு முழுவதுமேநிலவியது. முன்னைய அரசாங்கம்ஜனநாயகப்போர்வையில் கொடுமையான வகுப்புவாதக்கொள்கையைக் கடைப்பிடித்து மக்களின் அடிப்படை உரிமையையும் நீதியையும் மறுத்து வந்தது. பத்திரிகைச்சுதந்திரம் பறிக்கப்படுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதே ஜனநாயக சக்திகள் பார்லிமெண்டுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றுதிரண்டு உரிமைக்குரல் கொடுத்தன. இதுவேஈற்றில் ஜனநாயக தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் கட்சிகளின இணைப்புக்கு வழி கோலியது.

### சர்வகட்சி மகாநாடு

நம் உறுதிபூண்டுள்ள கொள்கைகளை அடைவதற்கு நீண்ட பயணம்செல்ல வேண்டியிருக்கும். இதில் நல்ல வழி முறைகள் கையாளப்பட்டால் இந்தப் பயணம் துரிதப்படுத்தப்படலாம். உதாரணமாக, மொழிப் பிரச்னைக்கு கௌரவமான, நிரந்தரமான, திருப்திகரமான, தீர்வுகாண வேண்டுமானால் இப்பிரச்னை கட்சி அரசியலிலிருந்து நீக்கி சர்வகட்சிப்பிரதிநிதிகளையும் கொண்ட வட்ட மேசை மகாநாடு நடத்தப்படவேண்டும். இதுவரை இவ்வித வட்டமேசை மகாநாடு நடத்தமுடியாது போனது வருந்தத்தக்க தொன்றாகும்.

### 29-வது ஷரத்து

அரசியல் அமைப்புச் சாஸனத்திலுள்ள 29-வது ஷரத்தை நீக்கிவிட எதிர்க்கட்சியினர் எடுக்கப்பட முயற்சி பற்றியும் இங்குகுறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது அகிலஇலங்கைத்தமிழ் காங்கிரஸ் சோல்பரி கமிஷனிடம் சிறுபான்மை இனத்தவர்களுக்குஅரசியல் சட்ட மூலமான பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த ஷரத்து அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டது. இதுசோல்பரி கமிஷன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம்

சமீபகாலத்தில் தமிழ் மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ள மற்றொரு விஷயம் இராமநாதன் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவுவது. அரசாங்கத்தின் 1694ம்


அம்மாவின் செல்வக் குமாரன்!
அவன் குறும்புக்காரன்!
ஒரு நிமிடமும்
ஓய்ந்திருக்கமாட்டான்!



நீங்களும் உங்கள் குழந்தைக்கு
சுகம், பெலன், சந்தோஷம் யாவையும் அளியுங்கள்.

விறுவிறுப்பான வளர்ச்சிக்கும், தெளிவான கண்பார்வைக்கும், குழந்தையின் உடலுக்கு தேவையானது விட்டமின் A. உறுதியான பற்களுக்கும், திடமான எலும்பு வளர்ச்சிக்கும் விட்டமின் D அவசியம். கட்டான உடலமைப்புக்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C அவசியம். தேவையான அளவுக்கு இவ்விட்டமின்களை உங்கள் குழந்தைகள் பெறுகின்றனவா என்று அறிந்திருக்க ஓர் நிச்சய வழி — அனுதினமும் குழந்தைகள் ஹலிபோரேஞ் அருந்துதலே. தடுமலையும் மற்ற தொற்று நோய்களையும் எதிர்த்துப் போராட ஹலிபோரேஞ்சில் காணப்படும் பாதுகாப்பளிக்கும் இம் மூன்று விட்டமின்கள் உடலுக்கு ஆயுள் முழுவதும் அத்தியாவசியம்.




திடமான, சீரான, சுகவளர்ச்சிக்கு

ஹலிபோரேஞ்

தயாரிப்பாளர்: கிளாக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிடெட்
தபால் பெட்டி 23, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்

## சிவாஜியுடன் சேர்ந்தார் சரோஜாதேவி!

நடிகர் சிவாஜிகணேசனுடன் மீண்டும் ஜோடி சேர்ந்தார் சரோஜா தேவி கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்யும் படத்திலேயே இருவரும் ஜோடியாக நடிக்கின்றனர்.

நடிகை சரோஜா தேவியும், சிவாஜிகணேசனும் சேர்ந்து நடித்த 'புதிய பறவை' படம் வெளி வந்த, ஒரு வருடகாலத்துக்குமுன் வெளிவந்தது. 'புதிய பறவை' படத்திற்குப் பிறகு சிவாஜியுடன் ஜோடியாக நடிக்க சரோஜாதேவிக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.



மீண்டும் இப்போது சிவாஜியுடன் நடிக்க சரோஜாதேவியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் சேர்ந்து நடிக்கும் புதுப் படத்தை பார்வதி பிக்சர்ஸ் கம்பனியார் தயாரிக்கின்றனர்.

இந்தப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பினை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றுள்ளார். இப்படத்தில் ரெங்கராவ், நாகேஷ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

### "தணியாத தாகம்"

மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கக் கலைஞர்கள், வருகிற வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ''தணியாத தாகம்'' என்னும் வரலாற்று கற்பனை நாடகம் ஒன்றை நடாத்தவிருக்கின்றனர். இதன் கதை, வசனம், பாடல்களை 'கவிஞர்-கரவைகிழான்' எழுதியுள்ளார்.

### 'ஏன் பிறந்தேன்?'

இருபாலை மத்திய சன சமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் தமிழ்க்கலை நாடகமன்றம் தனது அடுத்த தயாரிப்பான 'ஏன் பிறந்தேன்?' என்ற நாடகத்தை வெகுவிரைவில் மேடையேற்றவிருக்கிறது. இதன் தயாரிப்பு, டைரக்ஷன் பொறுப்புக்களை திரு. த. ஆனந்தராசா, திரு கு. தங்கவடிவேல், திரு. எம். பாலசிங்கம் ஆகியோர் ஏற்றுள்ளனர்.

நாடக விமர்சனம்

## இதுதான் முடிவு?

தமிழ் நாட்டைப் போன்று நம் நாட்டில் நாடகக்கலை வளர்ச்சியுறவில்லை என்பது இங்குள்ள ஒருசாராரின் குறை ஊக்கமளிப்பவர்களும்உதவியளிப்பவர்களும் நமது நாட்டிற் குறைவேதவிர, நடிகர்களுக்கோ புதியமுறையிற் சிந்தித்து நல்ல நாடகங்களைத் தயாரிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கோ இங்கு குறைவில்லை. ஈழத்து நாடகங்களை விருப்பிப்பார்ப்பவர்கள் இதனை நன்கு உணர்வார்கள். கடந்த மாதம் 23-ந் திகதி மாத்தளை புனிததோமையர் கல்லூரிஆசிரியர்களும் மாணவர்களும் கல்லூரி மண்டபத்தில் நடாத்திக்காட்டிய ''இதுதான் முடிவு'' என்ற நாடகமும் இந்த உண்மையையே அங்கு வெள்ளமெனத் திரண்டிருந்த கூட்டத்தினர்க்கு எடுத்துக் காட்டிற்று.

கதைமுழுவதும் ஒரு வட்டிக்கடையில் நடைபெறுகின்றது ஒரே அறை; ஒரே அமைப்பு; ஆறே ஆறு காட்சிகள்; இரண்டே இரண்டுமணித்தியாலங்கள்! நாடகம் முடிந்தும் மக்கள் எழுந்திருக்கவில்லை! தம்மையே மறந்துவிட்டார்கள்! புதிய உத்திகளைக் கையாண்டு அமைக்கப்பட்டகதை, இயல்பான வசனம், சிறிய பொருள்களிலும் பெருங்கவனம் காட்டியிருக்கின்ற முறை, எடுப்பான நடிப்பு என்பன இந்நாடகத்தின் வெற்றிக்கான காரணங்களாகும்.

கண்ணப்ப முதலியாராக வரும் ஆசிரியர் என். இராசரத்தினம் அவர் தாங்கிய பாத்திரத்துக்கென்றே பிறந்திருப்பவர்.

கணக்கப்பிள்ளை பொய்யாமொழியாக, முன்னர் ''இருலசாமி'' என்ற ஆங்கில நாடகத்தில் நடித்துப் பெயர் பெற்ற ஆசிரியர் எஸ். அருணசலம் அவர்கள் வருகிறார்கள். மேடையில் தோன்றிய ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சிரிப்புக் கருத்துடன் தோன்றியுள்ளார்.

சிறிதாகப் படைக்கப்பட்ட 'மரைக்கார்' என்ற பாத்திரத்துக்குச் சிறப்புக் கொடுத்த பெருமை ஆசிரியர் எல். எம். செபஸ்தியன்பிள்ளை அவர்களைச் சாரும். இதைப்போலவே 'முனியன்' பாத்திரத்துக்கு உயிரூட்டியிருக்கின்றார் மாணவர் எஸ். முத்துக்குமார்.

திருமதி சந்திராதேவி கண்ணப்ப முதலியாரின் இரண்டாந்தார மனைவியாக வருகின்றார். அன்பாகவும் அடக்கமாகவும் இருந்து பின்னர் தம்பியின் சூழ்ச்சியில் எடுபட்டுக் கணவனைக் கடைசியில் இன்னற்படுத்தும் பாத்திரம் அவருடையது. ஒவ்வொரு கட்டத்திலும், தான் ஓர் அனுபவம்மிக்க நடிகை என்பதனை திருமதி சந்திராதேவி நிலைநாட்டியிருக்கின்றார்.

இந்நாடகத்தைஎழுதித் தயாரித்து அளித்த ஆசிரியர் என். இராசரத்தினம் நாடகஉலகத்தின்பாராட்டுக்குரியவர். மொத்தத்தில் அருமையான ஒரு நாடகம் 'இதுதான் முடிவு.'

—வி. க

## நினைக்க நினைக்க அழுகையாக வருகிறது!

எனது பாட்டியில்லாவிட்டால் நான் சினிமாவுக்கே வந்திருக்க முடியாது! சினிமாவில் சேர விரும்பாத என்னை, அதைப் பற்றி நினைத்துப் கூடப்பார்க்காத என்னை இப்படி பெரிய நடிகையாக்கிய பெருமை என் அருமைப் பாட்டியையே சாரும்!

யாரோ ஒரு ஜோசியர் சொன்னாராம், நான் சினிமா நடிகையாகிநிறையப் பணமும். பெயரும் சம்பாதிப்பேனென்று! அதை மனதில் வைத்துக் கொண்ட என் செல்லப் பாட்டி வேளைக்கொரு மாதிரிச்சிங்காரித்து அழகு பார்ப்பார் கேட்கவேண்டுமா?



### பாட்டி கனவு பலித்தது; ஆனால்...?

எப்படியோ பாட்டியின் கனவு பலித்துவிட்டது. இன்று நான் ஒரு சினிமா நடிகையாகி விட்டேன், ஆனால், என்னை சினிமா நடிகையாக்க வேண்டுமென்று விரும்பிய, துடித்த என் பாட்டி அதைப் பார்க்காமலேயே போய்விட்டார், என் தந்தையார் இருக்கிறாரே அவராவது என் படங்களைப்பார்த்து ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? அவருக்குச் சினிமா என்றாலே பிடிக்காது! என் தாயார் இருக்கிறாரே, அவரைப் பற்றி என்ன சொல்ல? வீட்டு வேலை பார்த்துமுடிக்கவே அவருக்கு நேரம் ஏது? மொத்தத்தில் எனக்கு இவைகளை நினைக்கும் பொழுது அழுகைஅழுகையாகத்தான் வருகிறது!

## யாழ்ப்பாணத்து பள்ளி ஆசிரியர்கள் தயாரித்த பாசநிலா திரைக்கு வருகிறது!

ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் இரண்டு திரைக்கு வந்திருக்கின்றன. 17 மில்லிமீற்றரில் தயாரிக்கப்பட்ட 'சமுதாயம்' 1963-ல் திரைக்கு வந்தது. இதனையடுத்து 'தோட்டக்காரி' வந்தது. படம் ஓடியதோ, ஓடவில்லையோ இவைகளைத் தயாரித்தவர்களின் முயற்சி பாராட்டக்கூடியதுதான்!

இதோ, இப்போது ஈழத்தில் முழுக்க முழுக்கத் தயாரிக்கப்பட்ட 'பாசநிலா' என்ற தமிழ்ப் படம் திரைக்குவருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்களான ஜோ. தேவானந்தனும், தேவ்குலத்துங்கனும் இந்தப் படத்தைத் தயாரித்துள்ளனர். இப்படத்தின் கதை, வசனம், படப்பிடிப்பு ஆகிய பொறுப்புக்களை தயாரிப்பாளரும், டைரக்டர்களுமான திரு. ஜோ. தேவானந்தனும், தேவ்குலத்துங்கனும் ஏற்றுள்ளனர், பாடல்களை எம். எம். ஏ. ஹக் எழுதியுள்ளார்.

இன்றைய தென்னிந்திய தமிழ்ப் படங்களில் மலிந்துபோயிருக்கும் அளவுக்குமிஞ்சிய காதல் காட்சிகளையும், குத்துச் சண்டைகளையும் இந்தப் படத்தில் காணமுடியாது. முற்றிலும் புதுமையான முறையில் இந்தப்படத்தைத் தயாரித்திருக்கின்றார்கள் பெருத்த கஷ்டத்துக்கு மத்தியில்!

இந்தப் படத்தைத் தயாரித்த 'தேவா'வுக்கும், 'குலத்து'க்கும் படத் தயாரிப்பில் இது புதிய அனுபவம். ஆனாலும் நல்லவிதமான, புதிய புதிய உத்திகளை இப்படத்தில் கையாண்டுள்ளனர். 'நீயும் நானும்', 'நான்கண்ட கனவு' ஆகிய சிறந்த நாடகங்களை அளித்த 'தேவ் அன்ட்தேவ்' புரடக்ஷன்ஸாரின் முதல் தயாரிப்புத்தான் இந்தப் 'பாசநிலா'.

'பாசநிலா'வின் டெக்னிக்கல் டைரக்ஷனை திரு. செல்வராஜா ஸூதரும், மேக்கப் பொறுப்பை திரு. பி. அமிர்தநாதனும், உதவி டைரக்ஷன் பொறுப்பை செல்வி மேரி எலியாஸும் ஏற்றுள்ளனர். ரஞ்சி செல்வராசன், ஜயேந்திரா, மனோகரன், ஜடா தேவேந்திரன் ஜேர்ஜினு, செல்வரத்தினம், இளையதம்பி ஆகியோர் இப்படத்தில் நடித்திருக்கின்றனர்.

இப்படத்தின் ஒலிப்பதிவு கண்டாவில் நடந்தது.

'பாசம்' சிதறுண்ட ஒரு குடும்பத்தை ஒன்று சேர்க்கும்; 'பாசம்' தவறு இழைப்பவனையே நல்லவனாக்கும்போன்ற கருத்துக்களைக் கொண்ட கதையே 'பாசநிலா'.

இப்படத்தின் இரு காட்சிகளை பக்கத்தே பார்க்கலாம் இம்மாதம் 13ம்தேதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் முதல் முறையாக 'பாசநிலா'வின் முதல் காட்சி நடைபெற இருக்கிறது.

தமிழர்கள் தயாரித்த இந்த தமிழ்ப் படத்துக்கு தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் நல்லாதரவு வழங்குவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

—ராஜேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மேடை

டி.எம்.எம்

# விஞ்ஞானியும் அரசியல்வாதியும்

ராம, சந்திரன்

சந்திரனுக்கு ராக்கெட் அனுப்பும், நோக்கம் குறித்து ஒரு மனிதர் சந்தேகப்படுகிறார். விஞ்ஞான வளர்ச்சியில் ஆர்வம் காட்டிவரும் கோடானுகோடி பொதுமக்கள் சந்திரனைப்பிடிக்கும் போட்டா போட்டியை ஆவலுடன்கவனித்துவரும் நிலையில், ஒரு மனிதர் கவலைப்படுவது குறித்து ஏன் லட்சியம் செய்யவேண்டும் என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் கவலைப்படுவர் சாதாரண ஓர் ஆசாமி அல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே பௌதிக சாஸ்திரத்தில் நோபல் பரிசு பெற்றஉலகப்புகழ்பெற்ற ஒரு விஞ்ஞானி. பேரறிஞர். ஒரு தமிழர். சேர் சந்திரசேகர வெங்கட்ராமன் என்பது அவர் பெயர்.

ஒளியின் சக்தியை, அதன் தன்மையை உலகுக்கே நிரூபித்துக்காட்டி, ''ராமன் ஒளிக்கதிர்'' என்ற பெயரில் ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பையே நிலைநாட்டிய ஒரு விஞ்ஞானி, உலக விஞ்ஞானிகளின் இத்தகைய காரியத்தைக் குறித்துச் சந்தேகப்படுவதென்றால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவே வேண்டும். நமக்குத் தெரிந்தவரை, இதுவரையிலும்எந்தவிஞ்ஞானியாவது சந்திரனை நோக்கி மனிதன் செய்யும் பிரயத்தனத்தைகண்டித்ததாகக் கேள்விப்படவில்லை. எனவே ராமனின் கருத்துக்கள் இச்சமயம் முக்கியத்துவத்துக்குள்ளாகிறது.

சந்திரனில் மனிதனுக்குப் பயன்படும் ஆராய்ச்சி உண்மைகள் என்னவென்பதோ, அல்லது அதனால் ஏற்படும் நன்மை என்னவென்பதோ இந்த ராக்கெட் காரர்களின் நோக்கம் அல்ல என்றும், அணு ஆயுத ஆராய்ச்சியும், ராணுவ ரீதியில் அதை எவ்வளவு வெற்றிகரமாக எதிரிகள் மீது செலுத்தலாம் என்ற அம்சமுமே இந்த ஆராய்ச்சியின் நோக்கம் என்பதும் ராமனின் கருத்து. அரசியல்வாதிகளுக்கும், விஞ்ஞானி ராமனுக்கும் ஏற்பட்டுள்ள இந்தக் கருத்து வேறுபாடு என்ன என்பதை வருங்கால சரித்திரமே தீர்மானிக்கும்.

ராமனின் கருத்து, பெரிய ஒரு தத்துவ. விஞ்ஞான, வேத உண்மையை வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. மனிதன் ஆறறிவு படைத்தவன் என்பதை ''ஆறறிவு'' மனிதனே கண்டுபிடித்திருக்கிறான். ஆனால் அவனுடைய ஆட்டமெல்லாம் இந்த ஆறறிவுக்குள்ளேயே அடங்கிவிடுகிறது. கடவுளின் அறிவு இதைப் போன்றதல்ல என்பதையும் கற்பனைக்கெட்டாத அறிவு படைத்ததென்பதையும் அறிவு படைத்த மனிதனே ஒப்புக்கொள்ளுகிறான்.

பூமிக்கு அருகிலுள்ள கிரகம் சந்திரனே. 2,40,000 மைல் உயரத்தில் அது இருக்கிறது. பூமியின் அளவில் பாதிதான்அதன் அளவு. சூரிய மண்டலத்தில் சந்திரன், பூமி ஆகியவற்றைத்தவிர இன்னும் பல கிரகங்களும்இருக்கின்றன இவற்றில் சூரியனே மிகப் பெரியது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உலகம். சூரியனின் உயரம் 9,37,00,000 மைல்கள். ஆனால் அதைவிட கோடானுகோடி மடங்கு உயரமானதூரத்தில், பூமியைவிடவும், சூரியனைவிடவும் கோடானுகோடி மடங்கு பெரிதான நட்சத்திரங்கள் காணப்படுகின்றன. கற்பனைக்கெட்டாத எண்ணிக்கை உடைய உலகங்களை, கற்பனைக்கெட்டாத கடவுள் படைத்திருக்கிறார். அதில் ஒன்றுதான் சந்திரன். இந்த கோடானு கோடி உலகங்களில் ஒன்றான சிறிய ஒரு சந்திரனுக்குப் போகும் சாகஸத்தைத்தான் சிற்றறிவுடைய, ஆறறிவுடைய மனிதன் இன்னும் கண்டு பிடிக்க வேண்டியுள்ளது.

குருஷேத்திரப் போரில் கண்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்தான். பகவத்கீதையான இந்த உபதேசத்தை நாம் பயபக்தியுடன் பின்பற்றுகிறோம். உலகில் தர்மம் அழிந்து அதர்மம் தோன்றும்போது நான்அவதரிப்பேன் என்ற கடவுளின் பேச்சு இதில் வருகிறது. அதே போல் 2500ஆண்டுகளுக்குள் தாம் மீண்டும் தோன்றுவதாக இயேசு கிறிஸ்து அருளிச்செய்திருக்கிறார். இந்த நிலையில் பார்க்கும்போது உலகில் இப்போது தர்மம்அழிந்து அதர்மம் தோன்றியிருப்பதாகவே கொள்ளலாம். பூமியில் உள்ள உண்மைகளையே மனிதன்இன்னும் பகுத்தறியவில்லை. பூமியிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை முற்றாக அவன் உயர்த்தவும் இல்லை. இந்த நிலையில் பூமியைவிட்டு வேறோர் கிரகத்துக்குப் போக அவன் நினைக்கிறான். இவ்வளவும் ஆறறிவின் துணைகொண்டே நடைபெறுகிறது. கடவுள் இருக்கிறார் என்றும், இல்லையென்றும் கூறுபவர்கள் எல்லோரும் ஆறறிவுடையமனிதர்களே. இந்த ஆறறிவுக்குள் அவர்கள் கடவுளுக்குச் சவால் விடும்செய்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், ஒரு அறிவு கூடியிருந்தால் அவர்கள் என்னதான் செய்திருக்கமாட்டார்கள் என்பதும், வரையறையற்ற அறிவுத்தெய்வத்துடன் ஆறறிவு படைத்த மனிதனைஒப்பிடமுடியுமா என்பதும் இங்கு கேள்விக்குரிய விஷயம்.

★

## காமராஜர்

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் காமராஜர் இப்போது கிழக்குஐரோப்பாவைச் சுற்றிவரும் விஷயம், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டு தேர்தல் பிரசாரங்களில் அதிகமாக இடம்பெற்று வருகிறது.

அரசாங்கத்தின் தலைவரல்லாத, ஒரு கட்சித்தலைவரை வெளிநாடுகள் எப்படி அழைக்கலாம் என சில முதிர்ந்த ராஜதந்திரிகள் கேட்டு வருகிறார்கள். இதில் முதலிடம் வகிப்பவர் ராஜாஜி.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களும், கம்யூனிஸ்ட்கட்சிகளும், பார்லிமெண்டுகளும் வெவ்வேறு ரூபத்தில் அவருக்கு அழைப்பு அனுப்பியிருக்கின்றன,

ரஷ்யாவில் அரசாங்கத்தை விட, கட்சி சக்தி பெற்றதாய் இருக்கலாம். அதே முறையை இந்தியா விஷயத்தில் அனுஷ்டிக்கக் கூடாது என்ற தோரணையில் ராஜாஜி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். நிற்க.

சில ஆண்டுகளுக்கு முன் சோவியத் தலைவர்களுக்கு பிரிட்டன் விடுத்தஅழைப்பைத் தொடர்ந்து, அப்போதைய பிரதமரான புல்கானினும், குருஷ்சேவும்லண்டன்வந்தனர். ''சோவியத் யூனியனின் இரு சக்தி மிக்க மனிதர்கள்'' என இருவரையும் பிரிட்டிஷ் செய்திப்படங்கள் வருணித்த காட்சி, இலங்கையிலும் காணக்கூடியதாய் இருந்தது.

சில காலத்துக்குப் பின்பு சோவியத்தலைவர்களுக்கு இந்தியஅரசாங்கம் அழைப்பு அனுப்பியது. புல்கானின், குருஷ்சேவ், ஆகிய மேற்கண்ட இரு தலைவர்களும் இந்தியாவுக்கு வர ஆயத்தமாயினர். இருவரையும் சமநிலையில் நடத்தவேண்டும் என அப்போது சோவியத் அரசாங்கத்திடமிருந்து டில்லிக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது, குருஷ்சேவ் எவ்வளவு சக்தி உள்ளமனிதர் என்பதைக் காட்ட இது போதுமான உதாரணமாய் இருந்தது என்பதை, ரஷ்யஅரசியல் அமைப்பு மட்டுமின்றி, புல்கானினை அவர் வீழ்த்திய செயலும், நிரூபிப்பதாய் இருந்தது. எளிய சூழ்நிலையில் பிறந்த காமராஜர்தனது எளிமையான உடையினாலும், எளிமையான பழக்கவழக்கங்களினாலும் கிழக்கு ஐரோப்பிய வெள்ளையர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஆனால் இந்தியாவில், ஒரு கட்சித்தலைவரை எப்படி ஓர் அரசாங்கம் அழைக்கலாம் என்ற கேள்வி பிறந்திருக்கிறது. திரு காமராஜர் ஒரு கட்சித்தலைவரானாலும் இந்தியாவின் பிரதமர்களைப் படைக்கும் ஆற்றல் அவரிடம்தான் தங்கியிருக்கிறதென்பதை உலகம் அறிந்திருப்பதே இதற்குக் காரணம்.

இந்த அடிப்படையிலேயே பிரிட்டிஷ் அரசாங்கம், அப்போது கட்சித்தலைவராயிருந்த குருஷ்சேவுக்கும் அழைப்புஅனுப்பியது.

இந்தியா வந்திருந்த போது புல்கானினைவிட அதிகமாகப் பேசியவர் குருஷ்சேவ்தான். நிர்ப்பயமற்ற அவரது பேச்சுக்கள் அப்போது அவரது சக்தியை உணர்த்துவதாயிருந்தன.

எனினும் உலகின்சமீபகால சரித்திரத்தில் எந்த ஓர் அரசியல் கட்சித்தலைவரையும், பல நாடுகள் கூட்டாகஅழைத்ததில்லை. காமராஜர்தான் இதில் முதலிடம் பெறுகிறார். காங்கிரஸ் ஆட்சியின் சக்தி காமராஜரிடமும் ஓரளவு தங்கியிருக்கிறதென்ற உண்மையைஉலக நாடுகள் உணர்ந்திருப்பதற்கு இது ஓர் உதாரணம்.

ரஷ்யா போன்ற நாடுகளில் அரசாங்கத்தைவிட கட்சியின் தனித்தன்மை உயர்வானது என்ற ராஜாஜியின் வாதத்துக்கு, திரு. காமராஜருக்கு அமெரிக்கா விடுத்துள்ள அழைப்பு ஒரு சவாலாக விளங்குகிறது. அமெரிக்காவில், அரசாங்கம் தேச நிர்வாக விஷயத்தில் கட்சியைவிட அதிக சக்தி கொண்டது. அப்படிப்பட்ட அமெரிக்கா ஏன் ஒரு கட்சித் தலைவரான காமராஜருக்கு அழைப்பு அனுப்ப வேண்டும்? காமராஜர் இந்திய அரசியலில் ஒரு முக்கிய சக்தி என்பதை உணர்ந்திருப்பதற்கான அறிகுறியே இது எனவே, இந்திய வாக்காளர்களை காங்கிரஸ்பக்கம் திருப்ப, திரு. காமராஜரின் வெளிநாட்டுப் பயணமும் ஒரு சிறந்த பிரசாரமாக இருப்பின் அதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

காமராஜரின் வேஷ்டியும், சட்டையும், முழத்துண்டும் வெளிநாட்டில் எளிமையாகக் காட்சியளிக்கலாம். ஆனால் ஏழை இந்தியாவில் அதுவே காங்கிரசுக்கு ஒரு சக்தி மிக்க செல்வாக்காக இருக்கும் என்பதை அலட்சியப்படுத்த முடியாதநிலைஏற்பட்டுள்ளது. அதேசமயம், உலகப்பெரு நாடுகள் எதிலுமே இந்தியாவைப்போன்றஒரு தரதிருஷ்டநிலை இல்லை. இந்தியாவில் ஆளும் கட்சி அமோகப்பெரும்பான்மைகொண்டது டில்லியிலும், சென்னையிலும் அரசாங்கத்துக்கெதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இதற்கு உதாரணம். காங்கிரஸ் கட்சியின் அமோக பலமே காமராஜரை கிழக்கு உலகமும், மேற்கு உலகமும் அழைத்திருப்பதற்கு சான்று என்றும் சொல்லலாம்.


(7ம் பக்கத் தொடர்ச்சி)

## சமஸ்கிருத.....

கி. மு. 3-ம் நூற்றாண்டிலிருந்தே, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களுக்கு இலக்கியணக்கமளிக்கும் சாதனமாகவும், அவர்கள் வாழ்க்கையின் சாதாரண வழக்காகவும் சமஸ்கிருதம் இருந்து வந்திருக்கிறது பழங்காலத்தில் சாதாரண மக்களின் மொழிகள் பிரதேசத்துக்குப்பிரதேசம், காலத்துக்குக்காலம் வித்தியாசப்பட்டாலும், அவைகள் சமஸ்கிருதத்திலிருந்து ஒற்றுமையைப் பெற முடிந்தது. சமஸ்கிருதம் பிரதேச இலக்கியங்களுக்கு மட்டுமல்ல, மக்களின் வாழ்க்கைக்கே சக்தி அளித்தது.

(அடுத்த இதழில் முடியும்)

கோவில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான
அபிஷேக சந்தனம்
கோவில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்,
பரிமளம் நிறைந்த சந்தனவில்லைகள்
விளைவு கூடம்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
( மருந்துச்சரக்கு வியாபாரம் )
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ வலிமை
★ குளிர்மை
★ சிக்கனம்

இவற்றிற்கு
பிரசித்தி பெற்ற யானை மார்க்
அஸ்பெஸ்ரஸ்
கூரை சீற்றுக்களையே உபயோகியுங்கள்.
கிடைக்குமிடம்:
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

## இவ்வாரச் சிறுகதை

— சவிரிமுத்து குணரத்தினம் —

கூண்டிற்குள் இருந்த கிளி விடுதலை பெறத் துடித்துக்கொண்டிருந்தது.

என்னைப்போல்தான்!

அதைத் தடுத்துக்கொண்டிருந்தது சுற்றியிருந்த கம்பிவலை.

இந்த உலக பந்தபாசங்கள், தொல்லைகளிலிருந்து விடுதலை பெறத் துடிக்கிறேன்.

அதைத் தடுத்துக்கொண்டிருக்கிறது 'உறவு' என்ற கம்பிவலை! அந்தக் கம்பிவலையை அறுத்துக்கொண்டு போக அதற்கும் முடியவில்லை. இந்த உறவை முறித்துக்கொண்டுபோக எனக்கும் முடியவில்லை.

'கீச், கீச்' 'எப்பொழுது விடியும் எப்பொழுது விடியும் என்னும் எனது மனதின் எதிரொலியா அந்தக் கிளியின் ஒலம்.

''இந்த வாழ்க்கையே ஒரு நடிப்பு, இது போதும். துறவற வாழ்க்கையில் ஒரு பிடிப்பு. பிடிப்பற்ற, இந்த நடிப்பு வாழ்க்கை வாழ்வதிலும் துறவியாவதற்கு ஒரு துடிப்பு என் உள்ளத்தில் உருவாகிக்கொண்டே வருகிறது.''

கிளி என்னைப் பார்த்துக்கொண்டே இருக்கிறது. அதன் மனதிலும் என்னைப் போன்று எண்ணங்கள் தானா? ''இந்தாருங்கள்'' பூமாவின் குரல்தான் என்னை அழைக்கிறது

'என்ன?' என்ற என் கேள்வி எனது முகத்தில் தொங்கி நிற்கிறது. சொல்லத் தெரிந்தும் சொல்ல முடியாத ஊமை போன்று அவள் நின்றாள். சிறிது நேரத்தின்பின் அவள் குரலே ஒலிக்கின்றது.

''பால்காரன் பாக்கிதரவில்லை என்று அழுதுவிட்டுப் போகிறான். ராமன் வாங்கிய கடனைத் தீர்க்காவிடில் இனிச் சாமான் தரமாட்டாராம். பற்றாக்குறைக்குச் சாந்தா வேறு அழுகிறாள், பணம் கட்டாவிடில் பரீட்சைக்கு விடமாட்டார்களாம் என்ன பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே, எங்கேயாவது கடனாவது வாங்கிவாருங்களன்''

ஒரே மூச்சாகக் கூறிவிட்டாள், ஒரு பதிலும் கூறத் தான் எனக்குத் தெரியவில்லை.

''என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் பூமா? என்னை நம்பி எவன் கடன் கொடுப்பான்'' எனது ஆற்றாமை வெறுப்புடன் வெளிவருகின்றது. அவள் மௌனமாக நிற்கிறாள். வறுமையைத் தனக்குக் கொடுத்த ஆண்டவனை நோகிறாள்போலும்.

'இப்படியே நீங்கள் சொன்னால் எப்படித்தான் நான் அவர்களுக்குப் பதில் சொல்வது? நீங்கள் கொண்டுவரும் இந்த 140 ரூபாய் பணத்தில் எப்படிக் குடும்பம் நடத்துவது? உங்களுக்கு மனைவியாக அடிமைப்பட்டேனே...''

பொருமிய உள்ளத்தின் பிரதிபலிப்பாக வார்த்தைகள் பொங்கி வடிகின்றன. வார்த்தைகளில் படபடக்கும் பூமாவை அடிப்பதற்கு எனது கரங்கள் விரைந்தன. ஆனால் மனம் அதைத் தடுத்துவிட்டது.

''அப்பா'' என்றவாறு ஓடி வருகிறாள் சாந்தி. 'அப்பா, பாடசாலையிலிருந்து துரத்திவிட்டார்கள் அப்பா. பரீட்சைக்குப் பணம் கட்டாவிடில் பரீட்சை எடுக்க விடமாட்டார்களாம்.''

''நீ படித்துத்தான் எங்களுக்குச் சோறு போடப் போகிறாய். பேசாமல் வீட்டிலேகிட.'' ஆத்திரம் அவசரப்படுகிறது. இல்லாமை தலை குனிந்து நிற்கிறது.

''என்னப்பா இது, சோறு போடும் என்பதற்காகத் தான் கல்வி கற்பதா? அறிவை வளர்ப்பதற்காகக் கற்பது என்பது மறைந்துவிட்டதா?'' கலங்கியவாறே கூறுகிறாள் சாந்தி.

''நீயே எனக்குப் புத்தி கூறவந்துவிட்டாய், இல்லையா? அறிவை வளர்க்கப் போகிறாளாம் அறிவை. இங்கே வயிற்றை வளர்க்க வழியில்லை. வளமாக வாழ வழியில்லை, அறிவுமட்டும் எதற்கடி?'' கோபம் எனது முகத்தை எவ்வளவு கோரமாக்கியது என்று எனக்கே தெரிகிறது. அந்தக் கோபம் என்னைமட்டும் கோரமாக்கவில்லை. அழகான சாந்தியின் முகத்தையும்கூடத் தான் கோரமாக்கிவிட்டது. எனது ஐந்து விரல்களும் அப்படியே ஆழமாக அவள் முகத்தில் பதிந்திருந்தன.

''அம்மா'' என்றவாறே சுருண்டு விழுகிறாள் சாந்தி, எனது மேல்துண்டை எடுத்துப் போட்டவாறே அப்பால் விரைகிறேன். எனது மனைவியின் ஓலம், ஒடுங்கியபடியே நடக்கும் என்னைத் தடுக்கவில்லை. அது மேலும் என்னை விரட்டுகிறது.

இரவு நீண்டுவிட்டது வாசற்கதவைத் திறந்தவாறே மெதுவாக வருகிறேன் உள்ளே, அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தாள் சாந்தி. அவள் முகத்திலே இன்னும் என் விரல்கள் பதிந்திருந்தன.

''பாவி, நான் எத்தகைய மிருகத்தனமாக நடந்துவிட்டேன்'' என் உள்ளம் அழுகிறது அவளுக்காக. அவள் முகத்தை மெதுவாகத் தடவுகிறேன். அந்த ரோஜா மலரின் ஸ்பரிசம் என்னை முள்ளாகக் குத்துகிறது. இரு சொட்டுக் கண்ணீர் விழுந்து தெறிக்கிறது. அவளின் கன்னத்திலே என் உதடுகளைப் பதிக்கிறேன். பக்கத்திலே படுத்திருந்த என் மனைவியைப் பார்க்கிறேன். இனி அவளின் துணை இந்த ஒரு ஜீவன்தானே? மறைந்துவிட்ட எனக்காக ஒரு நாள் கவலைப்படுவார்கள், அதன்பின் மறந்துவிடுவார்கள். இதுதானே உலக நியதி! கடிகாரத்தை விற்றுக் கொண்டுவந்த பணத்தைப் பூமாவின் பக்கத்திலே வைத்தேன். இன்றுடன் பணத்தொல்லைகள் தீர்ந்துவிடும் எனக்கு. அவளை மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு, மெதுவாகக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்தபொழுது, அந்த இருட்டிலும் கிளிக்கூண்டு என் கண்களில்பட்டது. எனக்குக் கிடைக்கும் விடுதலை அந்தப் பறவைக்கு வேண்டாமா? கூண்டின் கதவைத் திறந்துவைத்தேன். விடியுமுன், அது நிச்சயம் பறந்துவிடும். அந்தப் பறவையின் ஏக்கங்களுக்கும் விடிவு வந்துவிடும். தெருவுக்கு வந்தேன். எனக்கு முன்னால் இருள் பரந்திருந்தது. எனது மனதிலும் இருள் மண்டிக்கிடந்தது.

''இத்தனை தொல்லைகள் இருந்தும் பித்தர்களைப் போல் மக்கள் திருமணம் புரிவான் ஏன்? தொல்லைகள் இல்லாத 'துறவு' இருக்கிறதே அதைவிரும்பாததேன்? சே, வாழ்க்கையே துன்பமாக?''

''கடைச்செலவு, உடைச்செலவு, இதர செலவுகள் எல்லாம் 140 ரூபாவிற்குள் அடங்கி விடுகிறதென்றால் நமது வாழ்க்கையையும் கேவலம் இந்த 140 ரூபாவிற்குத்தானா அனுபவிக்கிறோம். வாழ்க்கை என்றால் 140 ரூபா தானா அர்த்தம்?''

எண்ணியவாறே தெருவில் நடந்து செல்லுகிறேன். தொல்லைகளே இல்லாத தீவுக்குள் நான் நுழைவது போன்ற பிரமை எனக்கு உண்டாகிறது. அங்கிருந்தபடியே திரும்பிப் பார்க்கிறேன். தூரத்திலே, வெகு தூரத்திலே, மனிதர்கள் எல்லோரும் எத்தனை சிறியவர்களாய்த் தோன்றுகிறார்கள். எத்தனை பெரிய- அவர்களிலும் பெரிய-சுமைகளைத் தலைகளில் தாங்கிநிற்கிறார்கள்? அந்தச் சுமைகள் அவர்களை அழுத்தியபடியே இருக்கின்றன முகம் சுழித்தவாறு திரும்பி முன்னால் பார்க்கிறேன். இரண்டு ஒளிப் பிழம்புகள் என்னை நோக்கி வருகின்றன. அந்தப் பிரகாசம் பொருந்திய ஒளிக்கதிர்கள் என் கண்களைக் குருடாக்குகின்றன. கார் ஒன்று என்னைக் கடந்து செல்கிறது. திடுக்குற்று பிரமையிலிருந்து விடுபடுகிறேன்.

விடிவதற்கு இன்னும் ஒரு சில மணித்தியாலங்களே இருக்கின்றன. ஆனால் அதற்குள் மக்கள் நடமாட்டம் தொடங்கிவிட்டது யாராவது காணுவதற்குள் ஊரைக் கடந்துவிட வேண்டும் என்ற ஏக்கத்தில் விரைவாக நடக்கிறேன். வானத்திலே இருந்த பிறைச்சந்திரன் என்னைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது. தொல்லைகளையும் துன்பங்களையும் மனிதனுக்கு மட்டும் ஏன் படைத்தார் கடவுள்? இல்லாத ஏழைகளுக்கு எல்லாமே தொல்லைகள் தானா?

நடந்துகொண்டே இருக்கிறேன் பொழுது விடிந்துகொண்டிருக்கிறது. காலைப் பொழுது சுற்றிலும் உள்ள மரங்கொடிகளுக்கும், சூழவுள்ள உயிரினங்களுக்கும் எத்தகைய இனிமையான நேரம். தூரத்திலே கன்று ஒன்று குரல் கொடுத்து அழுதது. அதன் குரல் வீதியெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கிறது அதன் ஏக்கத்தைத் தீர்க்க எங்கிருந்தோ தாவி வந்தது தாய்ப்பசு. அந்த உறவின் இனிமை என்னைக்

(8ம் பக்கம் பார்க்க)

# நெஞ்சக் கனகல்

— பெரி. சண்முகநாதன் —

எமது நெஞ்சம் பக்தியே இல்லாது கல்லைப் போலச் சற்றும் இளகுதலின்றிக் கருங்கல்லாயிருப்பதை அனுபவத்தில்காணுகிறோம். இங்ஙனம் நெஞ்சின் இளகாத் தன்மையைக் கண்ணுற்றுத் தான் தாயுமானவர்,

''கல்லேனும் ஐயவொரு
காலத்து உருகும்; என்
கல் நெஞ்சம் உருக
இல்லையே...''

என வருந்துகிறார்.

இறைவனது திருவருள் கிடைத்தாலொழிய நெஞ்சம் உருகாது. இறைவன் திருவருளைப்பெற்று நெஞ்சம் உருகப்பெற்ற அருணகிரியார்,

''கல்நார் உரித்த என்
மன்னா! எனக்கு நல்
கர்ணாமி தப்பதம் தந்த
கோவே...''

என்றும், அவ்வாறே சிந்தையுருகித்திளைத்த மணிவாசகப்பெருமானும்,

''கல்நார் உரித்தென்ன
என்னையும் தன் கருணை
யினால்
பொன்னார் கழல் பணித்
தாண்ட பிரான்...''

என்றும் பாடி மகிழ்கின்றார்.

'இவ்வாறு கரடுமுரடாய் நெகிழ்ச்சி என்பதையே அறியாது கிடக்கின்றதே என் நெஞ்சம்! இவ்வளவு முரடான இடத்தில் இறைவன் எவ்வண்ணம் அமர்வான்?' என்ற ஏக்கம் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையைப் பிடித்துக்கொண்டது. எந்த முறையைக் கையாண்டேனும் எப்படியாயினும் இறைவனைத் தமது நெஞ்சில்-முரட்டிடத்தில் அமரும்படிசெய்ய வேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. அதற்கு ஓர் உபாய வழியையும் கண்டார்.

அவர் இறைவனை நோக்கி ''இறைவா! நீ ஒரு குறையும் இல்லாதவனென்று பெரியோர் கூறுவர். ஆனால் உன்னிடம் ஒரு குறையுள்ளது. அக்குறையை நீக்கிக் கொள்ளும்வழியையும் நான் கூறுவேன். ''குறை'' என்னவெனில் உனது மார்புப் புறத்தில் ஒரு தழும்பு உள்ளது: உனது பின்புறத்தில்-முதுகில் ஒரு தழும்பு உள்ளது. உனது மேற்புறத்தில்-தலையிலும் ஒரு தழும்புஇருக்கிறது. ஆனால் உனது கீழ்ப்புறத்தில் - அடிப்பாகத்தில் தான் எந்தவிதமான அடையாளமோ, தழும்போ கிடையாது. அதுதான் நான் உன்பால் கண்ட குறை. அக்குறையை நீக்க ஒரு வழி உளது.

''உனது மார்பில் தழும்பு-காஞ்சியிற் பூசித்த தேவி உன்னைக் கட்டித் தழுவிய தால், அவளுடைய முலைக்குவடு உனது மார்பில் பதிந்து தழும்பானது. மதுரையில் பிட்டுக்காக மண் சுமந்த போது பாண்டியன்பிரம்படி பட்டு உனது பின்புறத்தில்-முதுகில்தழும்பானது. ''அக்கோலால் மொத்துண்டுமண் சுமந்த பொன்மேனி'' என்கிறார் மணிவாசகர். தவஞ்செய்துகொண்டிருந்த அர்ச்சுனனோடு போர் புரிந்த போது, அவன் தனது வில்லால் உன் தலையில் அடிக்க அங்கேயும் ஒரு காயச்சுவடு ஏற்பட்டது.

ஆனால் உமது உடலின் கீழ்ப்புறத்தில் மாத்திரம் எந்தச் சுவடும் இல்லையே ஈசா! கரடு முரடான கல் போன்ற என் நெஞ்சத்தில் வந்து நீ அமருவா[illegible] இக்குறை உனக்கு நீங்கும்'' என்ற பொருளை வைத்து நயம்பட ஒரு பாடல் பாடுகின்றார்.

''தழுவுமையால்
முன்னும், தமிழிறை
ஏற் பின்னும்
தொழுமிறையால் மேலும்
சுவடு-கொழுமுவ; கீழ்
இன்றால் எனுங்குறை
போம், என் மனஞ்சேர்
வாட்போக்கி
அன்றால் அமர்ந்தாய்
அடி''

இக்கருத்தின் அழகுதான் என்னே! இக்கவிஞரின் திறம் தான் என்னே!

'கல்' என்பதற்கு 'மலை' என்றும் பொருள் உண்டு. இதனால் கருணைப்பிரகாச சுவாமிகள், ''ஆகா! முருகன் என் மனதில் எப்போதும் நீக்கமற நிறைந்திருக்கும் விந்தையைக் கண்டுகொண்டேன்; அதுயாதெனில் தான் விரும்பி வாழும் கற்களில்-மலைகளில் இதுவும் ஒரு கல்-மலை என நினைந்து மயங்கித் தான் எனது 'நெஞ்சக்கனகல்'லில் அவன் வீற்றிருக்கிறான்'' என்கிறார்.

''வளர் செழுங் குருதிச்
சூட்டு வாரணம் வலனு
யர்த்த
ஒளிகெழு பரிதி வைவேல்
ஒரு பெருங்கருணை
மூர்த்தி
களிகெழு சிறந்து தான்
வாழ்கற்களில் ஒரு கல்
லென்றோ
அளிய என் மனத்தி...
இருக்கும் மன்னோ''

குறள்விளக்கம்

# முகத்திரண்டு புண்

-பொ. சண்முகநாதன்-

ஒரு சமயம் நான் சில நண்பர்கள் சகிதம் மின்சக்தி நிலையம் ஒன்றைப் பார்வையிடச் சென்றிருந்தேன். அப்பொழுது எங்களுக்கு முன்னால் ஓர் இளைஞனும் எங்களைப்போலவே ஒவ்வொரு கருவிகளையும் பார்வையிட்டுக்கொண்டுசென்றான்.

ஓர் அறை வந்ததும் அவன் ஒரு கணம் நின்று அறை வாயிலை அண்ணாந்து பார்த்தான். அங்கு 'உள் நுழையக் கூடாது' என்ற அறிவிப்புக் காணப்பட்டது. ஆனால் அதை அவன் சட்டை செய்தவன்போல் உள்ளே நுழைந்துவிட்டான். அதன் விளைவு, அங்குள்ள அதிகாரிகள் அவனைக் கடும் வார்த்தைகளால் காரசாரமாகக் கண்டித்துப் பேசி விரட்டிவிட்டனர். அவன் அவமானத்தால் கூனிக் குறுகி அப்பால் நடந்தான்,

அந்த மின்சக்தி நிலையத்தின் இன்னொரு பகுதியில் 'அபாயம்' என்ற அறிவிப்புக் காணப்பட்டது. அதையும் அவன் மதித்ததாகத் தெரியவில்லை யாரும் எதிர்பாராத வகையில் திடீரென்று அங்குள்ள கம்பி ஒன்றை அவன் தொட்டுவிட்டான். அதன் விளைவு, அவன் மின்சக்தி தாக்கி தூக்கி எறியப்பட்டான். நல்லவேளை, முதலுதவிச் சிகிச்சை தெரிந்தவர்கள் அங்கிருந்தபடியால் அவன் பிழைத்துவிட்டான்.

அன்று அந்த இளைஞன் அங்குபட்ட அவமானத்துக்கும் அபாயத்துக்கும் என்ன காரணம் என்று ஆராய்ந்த போது அவன் கல்லாதவனாயிருந்ததே என்பது புலப்பட்டது. அவன் கற்றவனாக இருந்திருந்தால் அங்குள்ள அறிவிப்புகளையெல்லாம் படித்துப் புரிந்துகொண்டு அவமானத்திலோ, அபாயத்திலோ அகப்படாது எம்மைப்போலவே சுகமாகத் திரும்பியிருக்கலாம். கண்ணற்ற குருடர்களுக்கு ஏற்படாத விபரீதங்கள் கண்ணுள்ள அவனுக்கு ஏற்பட்டதற்கு கல்லாமையே காரணமாகும்!

இக்கருத்தை வைத்தே திருவள்ளுவரும் கல்லாதவரது கண்ணை முகத்திலிருக்கும் இரு புண்களாக உவமித்துக் கூறியிருக்கிறார். படித்தறியமாட்டாத - துன்பம் தருகின்ற-தேவையற்ற 'புண்'ணை கல்லாதவனுடைய கண்ணுக்கு ஒப்பிடுகிறார் அவர்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

கண் எல்லாருக்கும் இருக்கலாம். ஆனால் அது கற்றவர்களுக்கே கண்ணாகப் பயன்படும். மற்றவர்களுக்கோ அது புண்ணாக வேதனை கொடுக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுதலை விண்ணப்பம்

—5—

### 35 முயற்கறையின் அரும்பர நேர்வைத் தணிந்தவன்

வரம்பர னேநின் பழஅடி
யாரொடும் என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்
டாய்மெல் முயற்கறையின்
அரும்பர நேர்வைத்
தணிந்தாய் பிறவி
ஐவா யரவம்
பொரும்பெரு மான்வினை
யேன்மனம் அஞ்சிப்
பொதும்புறவே.

முயல்போலும் களங்கத்தையுடைய இளம்பிறையையும் பாம்பையும் அவை தம்முட் பகை யொழிந்து நேர்படச் சடாமுடியில்தரித்தருளிய பெருமானே! தீவினையேனது மனமானது அஞ்சி நடுங்கிப் புகலிடத்தையடையும்படி, பிறவிக்கு ஏதுவாகிய ஐம்புலநுகர்ச்சிஎன்னும் ஐந்துதலை நாகம் என்னுடன் பொருது துரத்துகின்றது. இது தேவரீர் அறியாதது அல்லவே! பரம்பரப் பொருளே! பழைய அடியார்களுடன் வஞ்சகனாகிய தமியேனையும் விரும்பி ஆட்கொண்டு சேர்த்தருளியபின் இப்போது கைவிடுதல் தகுமோ?

### 36 கொழுந்தேன் அவிர்சடை அரசு

பொதும்புறு தீப்போற்
புகைந்தெரி யப்புலன்
தீக்கதுவ
வெதும்புறு வேனை
விடுதிகண் டாய்விரை
யார்நறவந்
ததும்பு மந் தாரத்தில்
தாரம்ப யின்றுமந்
தம் முரல்வண்
டதும் புங் கொழுந் தேன்
அவிர்சடை வானத்
தடலரைசே.

மரப்பொந்தில் வைக்கப்பட்ட பெ நெருப்பானது முதலிற் புகைந்து, பின்பு கொழுந்துவிட்டெரிந்து அம் மரத்தையே அழித்துவிடும். அதுபோல ஐம்புல ஆசைகளாகிய தீப்பொறிகள் அடியேனது ஐம்பொறிகள்வாயிலாக நுழைந்து தமியேனை சுட்டெரிக்கின்றன. அதனால் வருந்துகின்ற தமியேனைக் கைவிடாது காத்தருளுக. நறுமணங் கமழ்த்தேன் பிலிற்றும் மந்தார மலர்களிற் படியும்வண்டுகள் வல்லோசை பழகிப் பின் மெல்லோசையாக ரீங்காரஞ் செய்துகொண்டு அழுந்தும்படி கொழுந்தேன் கமழுளிரும் சடாமுடி கொண்ட பெருமானே!

### 37 திருப்பொற்பதப்புயங்கன்

அரைசே அறியாச் சிறியேன்
பிழைக் கஞ்ச லென்னின்
அல்லால்
விரைசேர் முடியாய்
விடுதிகண் டாய்வெண்
நகைக் கருங்கண்
திரைசேர் மடந்தை
யணைந்த திருப்பொற்
பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன
வல்வினை தான்வந்
தடர்வனவே.

வெள்ளியபுன்முறுவலையும் கரிய கண்களையும் கொண்டு அலைவீசும் கங்காதேவியை மணந்த பெருமானே! பாம்புகளை அணிந்தவரே! பொன்போன்றதிருவடிகள்பொருந்திய ஆடல் அரசே! நறுமணங் கமழுந் திருமுடியை உடையவரே! மலைகள்ஒன்றுசேர்ந்து நெருக்கினாற்போலக் கொடிய வினைகள் வந்து அடியேனைத் தாக்குகின்றன. அறியாமை கொண்ட சிறியேன் செய்த பிழை பொறுத்து அஞ்சாதே என்று அபயங்கொடுப்பதன்றித் தமியேனைக் கைவிடுதல் தகுமோ?

### 38 தனிநீக்குந் தனித்துணை

அடர்புல னால்நிற்
பிரிந்தஞ்சி அஞ்சொல்நல்
லாரவர் தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர
சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி
யேன்தனி நீக்குந்
தனித் துணையே.

கிளர்ந்து எரியுந் தீச்சுடர் போன்ற திருமேனி யண்ணலே! சர்வ சங்காரப் பிரளய காலத்துச் சுடுகாட்டின் தனிநாயகனே! மெய்யன்பு கொண்ட தொண்டர்க்கு

## க. வை. ஆ. சர்மா

அமுதமானவரே! அன்பற்ற பிறரால் தொடர்ந்து பற்ற முடியாதவரே! தமியேனது தனித்துவத்தை நீக்கித் திருத்துவம் அருளும் ஒப்பற்ற துணைவரே! தமியேனைத் தாக்கும் ஐம்புலஉணர்வினால் தேவரீரைப் பிரிந்து அஞ்சியும், அழகிய சொல்லிம் வல்ல மகளிர் கூட்டமாகிய காட்டைவிட்டு நீங்க மாட்டாமல் அலைந்துதிரியும் என்னைக் கைவிடாது காத்தருளுக.

### 39. தலையால் நடந்த வினைத்துணையேன்

தனித்துணை நீநிற்க யான்
தருக் கித்தலை யால்
நடந்த
வினைத்துணை யேனை விடுதி
கண் டாய்வினை யேனு
டைய
மனத்துணை யேஎன் தன்
வாழ்முத லேஎனக்
கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும்
பொறேன்துய
ராக்கையின் திண்
வலையே.

ஒப்பற்ற துணைவனாகத் தேவரீர் இருப்பவும், அகங்கார மமகாரக் கிறுக்கினால் உம்மைத் துணையாகக்கொள்ளாமல் முறைகேடாக நடந்து வினைகளைத் துணையாகக்கொண்ட என்னைக் கைவிடாது காத்தருளுக. வினையேனுடைய உள்ளத் துணைவரே! என் வாழ்வின் மூலப் பொருளாயுள்ளவரே! எனது ஆபத்தில் உதவும் அருநிதியானவரே! மிக்க துன்பத்தையே தரும் இவ்வுடம்பாகிய வலையிற் சிக்குண்டு கிடப்பதைத் தினையளவு காலந்தானும் பொறுக்கமாட்டேன் காத்தருளுக.

### 40. கயிலாயமலைத் தலைவன்

வலைத்தலை மானன்ன
நோக்கியர் நோக்கின்
வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதி
கண் டாய்வெண்
மதியின் ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர
னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்
மண வாளஎன் வாழ்
முதலே.

வலையில் அகப்பட்ட மானின் பார்வை போன்ற மருண்ட நோக்கினையுடைய மகளிரது கண்வலையில் அகப்பட்டு அவர் வழியை மேற்கொண்டு அலைந்து திரிகின்ற தமியேனைக் கைவிடாது அருளுக. அலைந்து வருந்தி அடைக்கலம் புகுந்த சந்திரனை ஒற்றைக்கலையுடன் தாங்கி அபயம்அளித்தவரே! கருணையங்கடலே! கயிலாய மலைத் தலைவரே! மலைவளர் காதலி மணாளரே! அடியேனது வாழ்வின் முழுமுதற் பொருளே வணக்கம்.

(தொடரும்)

# நானும் நீயும்

— 'சித்தமழகியான்' —

'காண்டலே, கருதல், உரை என இவற்றுற்
காட்டுவோம்; நிறுவுவோம் — என்போர்
மாண்ட அப் பழநாள் அளவை நூல்வழியே
வாதங்கள் புரிகிறார்; அவற்றைப்
பூண்டுடன் வாங்கிப் 'புசுக்கென; ஒழிக்கும்
புலமை உண் டெமக்' கென்று சொல்லி
ஆண்டகை நிமிர்ந்தார்; ஆங்கு வந் தணைந்தார்,
அடுத்தவர்; அவரையும் பணிந்தேன்.

'இல்லையே என்னுல் தொல்லையே இல்லை'
என்கிறார் அரசவைக் கவிஞர்.
'சொல்லிலே சிலம்பம் சுழற்றுதல் மூலம்
சுலபமாய் எதனையும் தீர்க்க
வல்லம் யாம்' என்று வழக்குரைப் பவர்கள்
மற்றவர் பலப்பல பேர்கள்
பல்லொலி எடுத்தார்; பதைத்து நான் களைத்தேன்
பல பகல் அலைந்துலைந் தலுத்தேன்.

'விண்வெளி கடந்து கோள்களை அடையும்
மேதைகள் செயல்வலி கண்டும்
கண்களை மூடிக் கடந்தவே றெதையோ
காதலித் தரற்றுதல் மடமை.
பெண்களும் கள்ளும் பாடலும் கூத்தும்
பெறற்கரும் பே' றென மொழிந்து
நண்பர்கள் பலபேர் சூழ்ந்தனர்; பசைந்தார்.
'நாட்களைச் செலவு செய்' என்றார்.

புத்தியால் எதையும் புகுந்து போய் நோக்க,
'புகன்ற அப் பரம்பொருள் இன்றி
இத்திறம் வையம் இருத்தலும் சாலும்
இதற்கதேன்? இல்லை என் பதுவே
சத்தியம்!' என்ற முடிபினை அடைந்தேன்.
'சரி' என்று விளக்கினை அணைத்து
நித்திரை போக நினைந்து நான் படுத்தேன்
நீ எங்கே இருந்து வந்தாயோ?

'நான் இலேன்' என்று தருக்க நூல் நிபுணர்
நாட்டினார்; ஆயினும், நானே
நான்; இதை விளக்கப் பிறர்துணை வேண்டேன்;
நான் உளேன்; இதனை நான் அறிவேன்
ஏன், இனி நீயும் இருக்கிறாய் என்றே
எண்ணுதல் அவசியம் போலும்,
ஞானமும் தவமும் சீலமும் பொருந்தேன்,
நவையுளேன், தமியனேன் எனினும்!!

# பல்லவர் காலமும் பக்திக் கோலமும்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### வள்ளுவனின் சமரசம்

காதலையும் வீரத்தையும் ஓம்பிய தமிழ்ச் சைவநெறியாளர்க்கும்ஒழுக்கத்தையே மேலாகக்கருதி பெண்ணினத்தை வெறுத்தசமண- பௌத்தநெறியாளார்க்குமிடையில்பெரும் போராட்டமேஎழக்கூறியநிலையில்இருபகுதி யாரையும் சாந்தப்படுத்தும் பணியில்திருக்குறளைப்படைத்தான் திருவள்ளுவன்.

அகவாழ்வு, புறவாழ்வு, ஒழுக்கவாழ்வுஅனைத்தையும் அடக்கி அரியதோர் நூலை வள்ளுவன் ஆக்கினுலும்அது பல சமயநெறியாளரையும் திருப்திப்படுத்தும் நூலாகவே காணப்பட்டது. திருத்தும் நூலாகக் காணப்படவில்லை. எனவேதான் பக்திக் கோலம் பூணுவதற்கு மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டுவரும் பக்தர்களால் அது போற்றப்படவில்லை. நாயன்மார்களின் பாடல்களைப்போல தெய்வநெறியுடன்மக்களை ஈர்க்கும் சக்திதிருக்குறளுக்கு இருக்கவில்லை. பல்லவர் காலத்தின் பக்திவெள்ளம் திருக்குறளை அடித்துச் சென்று ஒரு கரையில் ஒதுக்கியது.

### பத்திமார்க்க மறுமலர்ச்சி

சமண-பௌத்தத்தை மறுக்கும் ஒரு சூழ்நிலை உருவாயிற்று. வலிமையிழந்த சமுதாயத்தில் சமண, பௌத்த நெறிகளை ஏற்றவர்கள் மீண்டும் வலிமைபெறலாயினர். பழைய தமிழ்ப்பண்பாட்டுடன் ஊறிய வழிபாட்டுமுறையை மீண்டும் போற்றுவதற்கான தோர்துடிப்பு அவர்களிடை காணப்பட்டது.

தமிழால் தமிழ்க் கடவுளாம் முருகனைப் பரவியவர்கள் பிராகிருத வடமொழித் திணிப்பை ஏற்கவில்லை. பரசமய நெறிகள் தமது பண்டைய நெறிக்கு மாருக அமைந்து மாட்சிமை பெற விளைவதை எண்ணி புதுமறுமலர்ச்சிபெற விழைந்தனர்.

இவ்வாறு புது வாழ்வு பெறும் சூழ்நிலை தமிழ்ச்சமுதாயத்தில் காணப்பட்டது. [illegible] வாக்கினுல் பாதிக்கப்படாத தமிழரின் சமயநெறியில் ஊறிய பெரியோர்கள் வாழ்ந்து வந்த வாழ்க்கை இவர்களுக்கு உற்சாகத்தினை அளித்தது.

தண்ணீர்ப்பந்தல், மடங்களிலே கல்வி வசதி, அடியார்தொண்டு, அன்னமளித்தல்போன்ற தொண்டுகளை மக்கள்மேற்கொண்டபோது வாழ்க்கையுடன் இணைந்த நெறியாக மீண்டும்புத்துயிர் பெற்றது. வலிமையற்ற சங்க காலத்தின் இறுதியிலே அமைந்த நிலையே பரசமய நெறிகள்புகுவதற்கு காரணம் என்பதனை உணர்ந்து மீண்டும் வலிமைபெறஆரம்

## க. நவசோதி

பித்தபோது தமது வாழ்வுடன்இணைந்ததமிழ்த் தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தினையும் ஆரம்பிக்கவே தமிழுடன் இணைந்த பக்திமார்க்கமும் புத்துயிர் பெறுவதாயிற்று.

அரசியல், சமுதாயம், பண்பாடு போன்ற பலதுறைகளிலும் சமண-பௌத்தத்திற்கும் அதனது ஆதிக்கத்திற்கும் எதிரொலியைக்கொடுக்கும் இயக்கமாக-பக்திமார்க்கமாக இயக்கம் பரவியது. வடமொழி, பாளி, பிராகிருத மொழிகளுக்கு எதிரான பண்பாட்டை நிலைநிறுத்தும் இயக்கமாக பக்திமார்க்கம் அமைந்தது. மன்னரின் ஆதரவும் கிடைக்கவே இந்த இயக்கமே பல்லவர் காலத்தில், தமிழ்நாட்டைப் பக்திக்கோலம் பூணவைத்தது.

### ஆரியசெல்வாக்கு

அப்பக்திக்கோலத்தில் பரசமய நெறிகளை எதிர்க்கும் மனோபாவமும், தமது மத சார்பான கொள்கைகளை ஏற்கும் உளப்பாங்கும் காணப்பட்டது. வைதிக நெறியிலே ஆரியரின் செல்வாக்கு தமிழர் நெறியில் செறிவதற்கு இது சாதகமாய் அமைந்தது. ஆரிய கடவுளர்களும் திராவிட கடவுளர்களும் ஒருமுகப்படுத்தப்படுதலும் ஏற்பட்டது.

சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட சிவன், உருத்திரனாகவும், வேள்வியையே காணாத சிவன் வேள்விக்குரிய மகாதேவனாகவும் போற்றப்பட்டனர். தமிழர்கள் பெரிதும் போற்றிய குறிஞ்சிநில தமிழ்முருகன் சுப்பிரமணியராகவும் சக்தியாகிய கொற்றவை, துர்க்கையாகவும் போற்றிப் பரவப்பட்டனர். ''ஐயனார் சிவனது அம்சம்; விநாயகர் சிவனது பிள்ளை'' என்னும் கொள்கைக்கு இத்தகைய கலப்பு அடிகோலியது.

### ஒற்றுமைக்குரல்

பக்திமார்க்கத்தின் கிளையாக சைவமும் வைணவமும் ஒருமித்த போராட்டத்தை நடத்தின. கபாலிகர், களாமுகர், பாசுபதர் போன்ற தீவிர பிரிவுகளையும் சைவம் தன்னுளடக்கிக் கொண்டது.

'அன்புநெறியே சிவநெறி சைவநெறி' என்றகொள்கையுடையசமுதாயம் கொலை செய்வதையும் அங்கீகரித்து வளர்ந்தது.

''ஆவுரித்துத் தின் றுழ
லும் புலையரேனும்
கங்கைவார் சடைக்
கரந் தார்க்
கன்பராகில் அவர்கண்டீர்
நாம் வணங்கும் கடவு
ளாரே''

என்ற நிலையிலே சகல பிரிவுகளையும் அடக்கி ஒன்றுபட்ட பலம் வாய்ந்த நெறியாக வளர்ந்தது.

''ஈனப் பறையர் களே
னும்-அவர்
எம்முடன் வாழ்ந்திங்
கிருப்பவர் அன்றே''

என்றும்,

''ஆயிரம் உண்டிங்கு
ஜாதி-எனில்
அன்னியர் வந்து புகல்
என்ன நீதி''

என்றும் பாரதி எந்த உணர்வுடன் அந்நியருக்கு எதிராக குரல் எழுப்பினுரோ அதே உணர்வையே பல்லவர் காலத்து அடியார்களிடம் காணமுடிகிறது. தமக்குள் பிரிவுகள், பிளவுகள் இருப்பதற்காக அவர்கள் சமண பௌத்தம் தலைதூக்குவதை விரும்பவில்லை.

### எதிர்ப்பியக்கம்

சக்தியை பழித்துரைத்தவர்க்கு பெண்ணைப்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஸ்கிருத மொழி மறுமலர்ச்சிக்கு சக்திவாய்ந்த அறைகூவல்

சமஸ்கிருதம் இந்தியாவின் பழம் பெரும் மொழி. இந்திய நாகரிகமும் பண்பாடும் சமஸ்கிருதத்துடன் இரண்டறக் கலந்துள்ளன. சமஸ்கிருத மொழியிற்தான் இந்தியாவின் பெருங் காப்பியங்கள் உருவாகின. அதே மொழியிற்தான் இந்து சமயத்தின் கோட்பாடுகளும், புராணக் கதைகளும், கொள்கை விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன.

இன்றுவரை பாரதத்தின் ஆத்மீக வளர்ச்சிக்கும், அதனுடைய . தத்துவ முதன்மைக்கும் அத்திவாரமாக விளங்கிவருவது சமஸ்கிருதமே.

சமஸ்கிருதம் ஒரு குறிப்பிட்ட மதத்துக்குச் சொந்தமானதல்ல. அது இந்தியாவிலும் உலகிலுமுள்ள அத்தனை இனங்களுக்கும், நாகரிகங்களுக்கும் சொந்தமானது.

**சுதந்திர பாரதத்தில் மறுமலர்ச்சிக்கோர் சின்னமாக சம்ஸ்கிருதக் கல்வியைப் பாரம்பரிய கல்வி முறைப்படி ஊட்டவேண்டுமென்ற கிளர்ச்சிக்கு அரசாங்கம் இடமளித்து, சமஸ்கிருதப் பல்கலைக்கழகங்களை வட இந்தியாவில் நிறுவியுள்ளது. நாடெங்கும் இத்தகைய பல்கலைக்கழகங்கள் நிறுவவேண்டுமென்ற கோரிக்கை அண்மையில் பங்களூரில் நடைபெற்ற சமஸ்கிருத மாநாட்டில் பரிசீலனை செய்யப்பட்டது. இக்கட்டுரை இதனையே விளக்குகிறது.**

## ஒற்றுமைக்கு ஒரு மொழி

பாரதத்தின் ஒற்றுமையை உணர்த்துவது சமஸ்கிருத மொழியே. ஆதிகாலம் தொடக்கம் இந்திய மக்களிடையே ஒற்றுமைப் பாலமாக, இணைப்புச் சக்தியாக அது விளங்கிவந்துள்ளது.

இத்தகைய சரித்திரப் பெருமையும், பண்பாட்டு வளமும் பெற்ற ஓர் மகோன்னதமான மொழி, இன்று இந்தியாவில் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருவதன் விளைவுகளைத் தீர்க்கதரிசனத்துடன் அறிந்துகொண்ட சில அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட முயற்சியின் பலனாக, சமஸ்கிருதம் இப்பொழுது புத்துயிர் பெற்று வருகிறது.

## மாநாட்டு நிகழ்ச்சிகள்

நாட்டின் கல்வி அமைப்பில் சமஸ்கிருதத்துக்கு ஓர் இன்றியமையாத இடத்தை அளிக்கவேண்டுமென்ற அறைகூவல், சென்ற மே மாதம் 27, 28, 29-ம் திகதிகளில் பங்களூரில் நடைபெற்ற சமஸ்கிருத விஷ்வ பரிஷாத்தின் எட்டாவது மாநாட்டில் விடப்பட்டது. இம்மாநாடு இந்திய ஜனாதிபதி சர்வாப்பிள்ளை ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் மற்றும் ஸ்ரீ கே. முன்ஷி, மைசூர் கவர்னர் திரு. வி. வி. கிரி, ஆந்திரா கவர்னர் சேர் பட்டம் தாணுப்பிள்ளை, மைசூர் பிரதம அமைச்சர் திரு. எஸ். நிஜலிங்கப்பா போன்ற அரசியற் பிரமுகர்களும், டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி, திரு. டி. பி. மீனாட்சி சுந்தரம்பிள்ளை போன்ற கல்விமான்களும், ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் போன்ற சமயப் பெரியாரும் கலந்துகொண்டனர். அத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்ற ஆயிரக்கணக்கான வித்துவான்களும், பண்டிதர்களும் பிரசன்னமாயிருந்தனர்.

சுருங்கச் சொன்னால், அன்று சமஸ்கிருதம் கோலாகலம் பூண்டுவிட்டது.

அன்றைய - அதாவது மாநாட்டின் முதல் நாளான மே 27 ம் திகதி மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிப் பேசிய ஸ்ரீ கே. முன்ஷி, சமஸ்கிருதத்துக்கு பாரதத்தில் ஏன் உரிய இடம் அளிக்க வேண்டுமென்பதைத் தக்க ஆதாரங்களுடன் வலியுறுத்தினார்.

உண்மையிலேயே ஸ்ரீ கே. முன்ஷியின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியாலுமே பாரதத்தில் இன்று சமஸ்கிருதம் தனது நிலையை முற்றிலும் இழந்துவிடாது காப்பாற்றிக்கொண்டது எனலாம். சமஸ்கிருத விஸ்வ பிரஷாத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் முதன்மையானவர் அவரே.

## ஸ்ரீ முன்ஷியின் ஆணித்தரமான பேச்சு

அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரத்தை இங்கு தருகிறோம்.

''இந்நாட்டின் மொழி, பண்பாடு, ஆன்மீக வளர்ச்சியில் சமஸ்கிருதத்தின் பங்கை மனதிற்கொண்டவர்கள், ஆங்கிலம், இந்தி, ஒரு பிரதேச மொழி என்ற மும்மொழித் திட்டத்தைப் பீதியுடன் அணுகாது இருக்க முடியாது. இத்திட்டம் அமுலானால், அது சமஸ்கிருதத்துக்குச் சாவுமணி அடித்ததுபோலாகும். அதன்பின் சில காலத்தில் தோன்றும் புதிய அறிஞர் பரம்பரை, சமஸ்கிருதத்தையோ அல்லது எமது வாழ்க்கையில் அதற்குள்ள நிலையையோ சிறிதளவும் அல்லது துப்பரவாகச் சிந்திக்காதவர்களாக இருக்கக்கூடும்.

சமஸ்கிருதப் பின்னணியில்லாத ஒரு பிரதேச மொழிக் கல்வி, எமது பண்பாட்டு ஒற்றுமையைக் குறைப்பதுடன், சமஸ்கிருதம் பிரதிபலிக்கும் குறிக்கோளிலிருந்து நாம் பெறும் பலத்தையும் பறித்துவிடும். இந்தியா தனது ஆத்மாவை இழந்துவிடும்.

கனிஷ்ட கல்வி முழுவதினூடாக இல்லாவிடினும் அதன் ஒரு கட்டத்திலாவது சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக்குவதன் மூலம் எமது பண்பாட்டைக் காப்பாற்றிக்கொள்வதில் எமது அரசாங்கங்களும், பொதுத்தாபனங்களும், தனி நபர்களும் அக்கறை செலுத்த வேண்டும்.

பொதுக் கல்வித் திட்டத்தில் சமஸ்கிருதத்தைக் கருத்திற்கொள்ளாதவர்கள், எமது வாழ்க்கையில் அம்மூத்த மொழி வகித்த, வகிக்கும் பங்கினை மனதிற்கொள்ளாதவர்களேயாவர்.

சர்தார் பணிக்கர் அவர்கள் கச்சிதமாக ''சரித்திரத்தின் அதிசயங்களில் ஒன்று'' என விவரித்த, ஓர் முறிவில்லாத தொடர்ச்சியை எமது மக்களுக்குச் சமஸ்கிருதமும் அதன் இலக்கியமும் அளித்துள்ளன.

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சைவம்

இலங்கையில் 2157 இந்துக்கோவில்களிருக்கின்றன. இவற்றுட் பெரும்பாலன சிவன், சுப்பிரமணியர், விநாயகர் ஆலயங்கள். சில கோயில்கள் பௌத்தமதம் வருவதற்கு முற்பட்டவை. கதிர்காமம், முன்னீஸ்வரம், கோணேசுவரம், திருக்கேதீசுவரம், தேவன்துறை விட்டுணு ஆலயம் முதலியன பழமையுடையன. கதிர்காமம் மற்றக் கோயில்கள் எல்லாவற்றிலும் மகிமையுடையதாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு பௌத்தர், முகமதியர், இந்துக்கள் எல்லாரும் சாதிமதபேதமின்றிச் சென்று வழிபடுகிறார்கள். சிங்களப் பௌத்தர் கந்தசுவாமி தமது தெய்வமென நம்பி வருகிறார்கள். புத்தகாயாவிலுள்ள பௌத்தகோயில் இந்துக்களால் நடத்தப்படுவது போலக் கதிர்காமக்கோயில்

**ந.சி.கந்தையாபிள்ளை**

பௌத்தரால் நடத்தப்படுகிறது. சிங்களவர் பௌத்த மதத்தைத் தழுவுவதன்முன் இவ்வழிபாடு இலங்கையிலிருந்ததெனத் தெரிகிறது. இக்கோவில் மாணிக்ககங்கையின் கரையிலிருக்கின்றது. பௌத்தகோயில்களின் முதன்மையான இடங்களில் கார்த்திகேயக்கடவுள் வைக்கப்பட்டுள்ளது. கண்டியிலும், வதுளையிலும் பௌத்தர்களால் நடத்தப்படும் இரண்டுகந்தசுவாமிகோவில்களிருக்கின்றன.

பௌத்தர் விட்டுணுவையும் வணங்குகின்றனர். கொழும்பில் பெரிய விட்டுணு கோயிலொன்று பௌத்தரின் ஆதிக்கத்தில் இருக்கிறது. தியத்தலாவையில் ஒரு பௌத்த ஆலயமிருக்கிறது. அதற்குப்பக்கங்களில் கார்த்திகேய, விட்டுணு ஆலயங்களிருக்கின்றன. தம்பளைக் குகைக் கோயில்களுளொன்று விட்டுணுவுக்குரியது. தந்த மாளிகையிருக்கும் கண்டியில் விட்டுணு கோயிலும் பிற இந்து தெய்வங்களின் கோயில்களு மிருக்கின்றன. கண்டியை ஆண்ட கடைசி ஐந்து அரசரும் தமிழர்.

ஆதம்மலை எனப்படும் சிவனொளிபாதமலையில் புத்தருடைய பாதச்சுவடு என நம்பப்படும் சுவடு காணப்படுகின்றது. இந்துக்கள் அது சிவன்கடவுளின் பாதச்சுவடு என நம்பி வருகிறார்கள்.

திருக்கோணமலையிலுள்ள கோணேசர் கோயில் பௌத்தமதத்தின் வருகைக்கு முற்பட்டது. இது கி. மு. 2000-ல் இருந்தது என நம்பப்படுகிறது. இது சிவன்கோவில். இக்கடவுள் எழுந்தருளியிருந்த கோயில் ஆயிரங்கால் மண்டபமாகவிருந்தது. போர்ச்சுக்கேயர் அதனைத் தகர்த்தெறிந்து கோயிலின் செல்வத்தையும் கவர்ந்தார்கள். இராவணன் தினமும் கோணேசர் ஆலயத்தில் வழிபாடுசெய்தானென்றும் அவன் அவ்வாலயத்தைத் தூக்கித்தலைநகருக்குக்கொண்டுசெல்ல முயன்றானென்றும் அது கைகூடவில்லையென்றும் பழங்கதைகள் வழங்குகின்றன. இது தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. இவ்வாலயத்தின் புகழ் தேவாரம் பாடியவர்களின் காலத்துக்குமுன் தென்னிந்தியாவிற் பரவியிருந்ததெனத் தெரிகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

# இ. போ. ச. பஸ்ஸில்

# ஒரு நெடுவழிப் பயணம்

—5—

இங்கே கல்லோயாத் திட்டம் என்ற இந்த மலைச்சாரலில் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து ஆட்களைக் குடியேற்றி அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள். தொகுதி தொகுதியாக அவர்களைப் பிரித்து, ஒவ்வொரு தொகுதியையும் ஒவ்வொரு யூனிட்டாக குளனிக் கிராமமாக வகுத்து, கமம் செய்வதற்கு வயலும், வயலுக்குப்போதிய தண்ணீரும், கால்நடைகளும், குடியிருப்பதற்கு ஆசிரமம்போல குடும்பத்துக்கு ஓர் அழகான வீடும், மற்றும் பள்ளிக்கூடம், வைத்தியசாலை வசதிகள் எல்லாம் தேடிக்கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கிராமங்களைக்கண்காணித்து நடத்துவதற்கு கிராமாதிகாரிபோன்ற உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். இப்படி நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

ஓர் இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக கட்டாறுகப் பாய்ந்து கிழக்குமாகாணத்தை நாசப்படுத்திக்கொண்டிருந்த கல்லோயாவை மலை உச்சியில் கட்டிப்போட்டுவிட்டுத்தான் மலைச்சாரலில் இந்தமாதிரி ஒரு புது உலகத்தை நிர்மாணித்துவருகிறார்கள். வயலும்கமமும்மாத்திரமன்றி பால்பண்ணை, தாவரப்பண்ணை கால்நடைப்பண்ணை, கோழிப்பண்ணை, பழத்தோட்டங்கள், கரும்பு, ஓடு உற்பத்தி, மீன்வளர்ப்பு, கட்டடம், மின்சாரம் என்று வேறும் அநேகம் தொழில்கள் இங்கு விருத்தியடைந்து வருகின்றன. உழவோர் உலகத்தார்க்கு ஆணியாகவிருப்பதை-உழவுத்தொழிலே எல்லாத்தொழில்களுக்கும் ஆதாரமாயிருப்பதை இங்கு காண்கிறோம். மேழிச்செல்வம் எப்படி யெல்லாம் கொழித்துக் கொட்டுகிறது! இந்த மலைச்சாரலின் அடிவாரத்தில் இருந்த ஊர்மக்களுக்கு ஒரு காலத்தில் பாறாங்கற்களும் கூழாங்கற்களுமாக மழைவெள்ளம் கொண்டு வந்து கொட்டியது. இன்றோ உருண்டோடிடும் பணம்

— "காங்கேயன்" —

காசெனும் உருவமான பொருளே!

ஓரிடத்தில் புதுவெள்ளம் வாய்க்காலிலே கரைபுரண்டு வந்தது. 'நெடுந்தீவுநண்பர்' அவ்விடத்தில் காரைமறித்து இறங்கி இடுப்பில் ஒரு துண்டைச்சுற்றிக்கொண்டு கால் மணிநேரம் ஆனந்தமாக கல்லோயா தீர்த்தமாடிவிட்டுத்தான் திரும்பினார்.

பறவைகள் கூட்டம் கூட்டமாக ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசம் போய் உறைகின்றன. காட்டு மிருகங்கள் நாட்டுமிருகங்களாகி வீட்டு மிருகங்களாகவும் பழகிப்போய் நம்முடனே வாழ்கின்றன, நாடு காடாகிறது. காடு பட்டணமாகிறது. கடல்கோள், புயல் காற்று, பெரு வெள்ளம், பூகம்பம், எரிமலை என்பன பூகோள அமைப்பையே மாற்றிவிடுகின்றன. குமரிமுனைக்குத் தெற்கேயிருந்த நிலப்பரப்பான லெமூரியாக் கண்டத்தில் பெரும்பகுதியை கடல்கொண்டபோது தப்பிப்பிழைத்தவர்கள் வடக்கே விந்தியமலைக்கு அப்பால் சென்று குடியேறி பின்பு அங்கிருந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கூட்டமாகப்பிரிந்துபோய்வாழ்ந்தார்களாம். பார்க்கப்போனால் மனித சமுதாயத்தின் வரலாறே ஒரு யாத்திரையாகத்தானே நடைபெற்று வந்திருக்கிறது. பூமண்டலத்தின் கதையே ஒரு சுற்றும் சுழற்சியும் அழிவும் தோற்றமுமாக நிலைப்பும் பெயர்ச்சியுமாகத்தானே சம்பவித்திருக்கிறது-சம்பவித்துக் கொண்டிருக்கிறது.

சென்ற 2-வது உலகமகாயுத்தம் முதலாக இதுமாதிரி நிர்மாண அபிவிருத்தித்திட்டங்களில் சேர்ந்து பலதரப்பட்ட வேலைகளையும் ஏற்று பணிவடக்கமாகத் தொழில் புரியும் ஒரு திருப்பம், நாலு காசு சம்பாதிக்கவேண்டும் என்ற மன ஆர்வமும் எழுச்சியும் பொதுமக்களிடையே எல்லா ஊர்களிலும் போலத்தான் இங்கேயும் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக வயல் செழித்த மருத நிலமும், நெய்தல் நிலமும், போடிமார்களும் மட்டக்களப்பு வாசிகளை வெளியூர் போக விடுவதில்லையென்பதுதான் வெளியூர்களில் அபிப்பிராயம். காதிலே [illegible] கடுக்கன் குறுக்கிட்ட தலையில் [illegible] விபூதிப் பூச்சும், இடுப்பில் ஒரு வெள்ளை வேட்டியும் தோளில் சால்வையுமாக பஸ்ஸுக்குக் காத்து நிற்கும் சாமித்தம்பி போடியாரைப் பார்க்கும்போது எமது பாட்டனையோ, பூட்டனையோ பார்த்த ஞாபகம்தான் வருகிறது. மவுலானா போடியாரைக்காணும்போது-சே! இத்தனை வயசாகியும் என்ன கலகலப்பும் உற்சாகமும் இந்தக் கிழவனிடம். எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தாலும் சலிக்காத குஷியான பேர்வழி. பெரும்பகுதியும் தமது நிலபுலன்களைப்பற்றியே கதை அளக்கிறார்கள். நிலச்சுவான்தார்களான இந்தப் போடிமார்கள் நீண்ட நெடுங்காலமாக மட்டக்களப்புத் தமிழகத்தின் 'ஸ்ரீமான் பொதுசனம்' ஆக இருந்தவர்கள் - இருந்துவருவார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம. பொ. சி. சொன்ன கதை

ஒரு ஊரில் ஒரு செட்டியார் வசித்துவந்தார். அவர் கத்தக் கருமி; எச்சில் கையால் காக்கை ஓட்ட மாட்டார். உண்ணும் உணவிற்காகக்கூட அதிகம் செலவு செய்யமாட்டார். ஒரு நாளைப்போல ரசம், சோறுதான்!

செட்டியார் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு ஏழைக் குடும்பம்! அவர்கள் வீட்டில் தினம் தினம் புதிய புதிய பதார்த்தங்கள் சமைப்பார்கள்; சாப்பிடுவார்கள்.

செட்டியாரின் மனைவியும், ஏழையின் மனைவியும் சிநேகிதம்! ஏழையின் மனைவி, செட்டியாரின் மனைவிக்கும் தான் அன்றாடம் சமைக்கும் பதார்த்தம், குழம்பு இவைகளில் கொஞ்சம், கொஞ்சம் கொடுப்பாள். இப்படியே பல நாள் நடந்துவந்தது. ஒரு நாள்-

செட்டியாரிடம், 'ஏங்க' நம்மிடம்தான் இவ்வளவு பணம் கொட்டிக் கிடக்கிறது. இருந்து என்ன பிரயோசனம்? ஒரு நாளைக்காவது நமக்குப் பிடித்தமான ஒரு பதார்த்தத்தைச் சமைத்துச் சாப்பிட முடிகிறதா? அடுத்த வீட்டைப் பாருங்கள். ஏழைதான் அன்றாடம் தினுசு தினுசான சமையல்கள் செய்து சாப்பிடுகிறார்கள்......!' என்று குறைபட்டாள் செட்டியாரின் மனைவி.

செட்டியார் சொன்னார், 'போடி பைத்தியக்காரி. அவர்களுக்குப் பண ருசி தெரியவில்லை. அதனால் பதார்த்த ருசி பார்க்கிறார்கள். பண ருசியைத் தெரிந்துகொண்டால் பதார்த்த ருசி பார்க்கமாட்டார்கள் அவர்களுக்குப் பண ருசியைத் தெரியவைக்கிறேன் பார்!' என்று சொல்லிவிட்டு பெட்டியைத் திறந்து தொண்ணூற்றொன்பது ரூபாயை எடுத்து வந்து மனைவியிடம் கொடுத்து 'இதைக் கொண்டுபோய் அடுத்த வீட்டுக் குடிசையில்—அவர்கள் கண்களில் படும்படி எங்கேயாவது செருகிவிட்டு வந்துவிடு! நான்கு நாள் கழித்துப் போய் கொஞ்சம் குழம்பு கேட்டு வாங்கிவா' என்றார்.

செட்டியாரின் மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. கணவன் சொற்படி நடந்தாள். நான்கு நாட்கள் கழிந்தன.

ஒரு சின்னக் கிண்ணம் எடுத்துக்கொண்டுபோய் 'லட்சுமி! கொஞ்சம் குழம்பு கொடு!' என்றாள் செட்டியாரின் மனைவி.

'இல்லையம்மா. குழம்பு இல்லை வெறும் ரசம்தான் இருக்கிறது. அதுவும் கொஞ்சம்தான்......' என்று இழுத்தாள்.

'கொடுப்பதற்கு இல்லை' என்று அவள் சொல்லாமல் சொல்வது செட்டியாரின் மனைவிக்குப் புரிந்துவிட்டது. ஆனால் இந்த 'திடீர்' மாற்றத்தைத்தான் புரிந்துகொள்ளமுடியவில்லை. செட்டியாரின் மனைவி செட்டியாரிடம் ஓடிவந்து விஷயத்தைக் கூறினாள். செட்டியார் புன்முறுவல் பூத்தபடி 'இந்த விஷயத்தை அவர்கள் வாயாலேயே அறிந்து கொள்!' என்று சொல்லிவிட்டுப்போய்விட்டார். மீண்டும் அடுத்தவீட்டிற்கு ஓடிய செட்டியாரின் மனைவி நாசூக்காகப்பேசி விஷயத்தை வரவழைத்தாள்.


ஏழையின் மனைவி சொன்னாள். 'மூன்று நாட்களுக்கு முன் எங்கள் வீட்டுக் கூரையில் தொண்ணூற்றொன்பது ரூபாய் கண்டெடுத்தோம். எடுத்ததுதான் எடுத்தோம் நூறு ரூபாயாக இருக்கக்கூடாதா? என்று வருத்தப்பட்ட நாங்கள் அந்த ஒரு ரூபாயைச்சேர்க்க ஒரு வேளை ரசத்தைக் குறைத்தோம். நான்கு நாட்களில் ஒரு ரூபாய் சேர்த்து நூறுரூபாயாக்கிவிட்டோம். நான்கு நாட்களில் ரசத்தை மட்டும் விலக்கி ஒரு ரூபாய் சேர்த்து விட்ட எங்களுக்கு, இன்னும் குழம்பு, மற்ற கறி வகைகளையும் விலக்கி காசைமிச்சப் படுத்துலாமே என்ற எண்ணம் தோன்றியது. அதன்படியே குழம்பு, கறி வகைகளையும் நீக்கித் தேவைக்கு மட்டும் ரசம் வைத்துச்சாப்பிடுகிறோம். இத்தனை நாட்களும் காசினுடைய அருமை தெரியாமல் இருந்துவிட்டதற்கு அவர் (கணவர்) ரொம்ப வருத்தமடைந்தார்' என்று முடித்தாள்.

ஓசியில் கிடைத்துவந்த, வாய்க்கு ருசியான பதார்த்தங்களையும் தன்னுடைய கணவனால் இழந்துவிட்டோமே என்று விக்கித்து நின்றாள் செட்டியாரின் மனைவி.

தன்னுடைய மனைவிக்கு 'ஒன்றை' புரிய வைப்பதற்காக தொண்ணூற்றொன்பது ரூபாயை அநியாயமாக இழந்துவிட்டோமே என்று இன்னமும் வருந்தி வருகிறாராம் செட்டியார் நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக ரசத்தைக்கூட நிறுத்திவிட்டதாகக் கேள்வி!

(பாண்டிச்சேரியில் நடந்த கூட்டுறவு விழாவில் ம. பொ. சி. பேசியது.)


வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

'சிலம்புச் செல்வர்' ம. பொ. சிவஞானகிராமணியாருடன் நமது நிருபர் க. நவசோதி.

## வைத்திய ஒளி

# ஹிஸ்டீரியா

மன அதிர்ச்சி காரணமாக எழும் இந்நோய் நமது இலங்கையில் விசேடமாகப்பெண்களைப் பீடிக்கிறது. இந்தக் கோளாறின் சின்னமாகச்சரீரத்தின் எல்லாப் பக்கங்களிலும் இலட்சணங்கள் தோன்றுகின்றன. இந்த இலட்சணங்களுக்கேற்ப பேய் என்றும், சூதக சன்னி ரோகம், சங்கம தோஷம், பிரதிபந்தம், சங்கைக் கோளாறு, ஹிஸ்டீரியா (Hysteria) என்று பலபல பெயர்களால் அழைக்கிறார்கள். ஆனால் பொதுவாக இந்தக் கோளாறுக்குக் காரணம் மன அதிர்ச்சியே. இது நரம்பைப் பற்றினவியாதி; விட்டுவிட்டு வரும். சந்நி வரும்போது மூத்திரம் தெளிவாய் இறங்கும். இடதுபக்கமாய் அடிவயிற்றில் வேதனையும், இரைச்சலும் காணும். உருண்டையாய்மேலுக்கேறி தொண்டையை அடைப்பது போலத் தோற்றும். (Globus-hystericus) சிலவேளை வலிகாணும் ஸ்திரீகளுக்கு முக்கியமாகக் காணுகிற இந்த ரோகமானது, மாத

— க. வேல்மணி —

விடாய் ஆரம்பமுதல் அது நிற்கிறகாலம் வரையில் அவர்களை உபத்ரவத்திற்கு உள்ளாக்கும்.

### இவ்வியாதிக்கு காரணம் யாது?

இந்தத் துஷ்ட வியாதி பரம்பரையாய்ச் சிலருக்குக் காணும். மாதவிடாய் அக்கிரமத்தால்- அதிக சம்போகம், அதிகமதுபானம்குடித்தல், பயம், சிரசில் அடிபடுதல், மனத்துக்கம், குடும்பச் சச்சரவின் காரணமாகவும், ஒரே இடத்தில் அடைத்து வைத்திருப்பதாலும், பருவ காலங்களில் மணம் முடித்து வைக்காததன் பேறாலும், இந்நோய் வரும்.

தென் இந்தியாவில் இருபது வயதுள்ளமாது ஒருத்தி வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டாள். தன்னைவிட பதினைந்துவயது பெரியவன் ஒருவனை மணந்தவள். அவன் குடிப்பழக்கத்திலும் சூதாடுவதிலும் மிக விருப்பம். இதை மறந்துவிடுமாறு பன்முறை மனைவி கேட்டாள் ஆனால் கணவனோ கேட்கவில்லை. இதன் காரணத்தால், நடந்தகுடும்பக் கலவரத்தால் நாளடைவில் அப் பெண்மணி இந்நோய்க்கு ஆளாகி, ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்க்கப் பட்டாள்- ஆனால் இந்நோய் மாதம் ஒரு முறையோ அல்லது இரு முறையோ காணப்பட்டது. பல டாக்டர்கள் காக்கை வலிதான் என்று நினைத்து விட்டுக்கடைசியில் ஹிஸ்டீரியா என்று கண்டுபிடித்தனர்.

(இவை 1951-ம் ஆண்டு தை மாதம் வெளியாகிய 'அமுது' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது )

### லக்ஷணங்கள் யாவை?

இந்த வியாதிக்குரிய குறிகளாவன: நோயாளியின் கைகால்களில் இசிவு, விரல்களை முடக்கிக்கொண்டுமாரில் அடித்துக் கொள்ளல்- தலைமயிரைப் பிடுங்குதல், உடைகள் தளர்ந்த வண்ணம் ஆடுதல், பாடுதல், சித்தப்பிரமை சில சமயங்களில் மயக்கம், எதற்கும் சிரித்தல், ஆண்களைச் சில சமயங்களில் கண்டால் பேசுதல் அல்லது பிடிக்கப்பார்த்தல், கண்ணீர் வடிதல், சில சமயங்களில் விடாதவிக்கல் காணப்படும். ஒவ்வொரு வேளையும் பிரக்ஞையில்லாமல் அயர்ந்துவிழுதல், இவைகள் கொஞ்ச நேரம் இருந்ததின் பின்னர் தெளிவுபிறக்கும். வலிநின்ற உடனே நீர் தெளிவாயும் அதிகமாயுமிறங்கும். இவ்

(10ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சைவம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னீஸ்வரம் மிகப் பழைய சிவன்கோவில்களுளொன்று. இராவணனைக் கொன்றபின் இராமர் இந்தியாவுக்குத் திரும்பும் வழியில், இராவணனைக்கொன்ற பாவம் தீர்க்கச் சிவலிங்கம் வைத்துப் பூசித்த தலம் முன்னீஸ்வரம் என நம்பப்படுகிறது.

தேவன்துறையில் பழைய விட்டுணு ஆலயம் இருக்கிறது. இரண்டாம் தப்புளு என்னுமரசன் இவ்வாலயத்தையமைத்ததாக வரலாறுள்ளது. தொடக்கத்தில் சந்தன மரத்தால் செய்யப்பட்ட திருவுருவம் கோயிலினுள் வைக்கப்பட்டிருந்தது. (தம்பதேனியா) பராக்கிரமபாகு முன்னிருந்த திருவுருவத்தை நீக்கிவிட்டுப் பொன்னினால் ஓர் உருவம் அமைத்தான். இவ்வாலயம் ஒரு நகரம்போல் காட்சியளித்தது. போர்ச்சுக்கீசியர் அவ்வழகிய ஆலயத்தைத் தரைமட்டமாக்கிவிட்டு அதன் செல்வத்தையும் கவர்ந்தனர்.

திருக்கேதீச்சுரம் பழைய சிவன்கோயில்களுள் ஒன்று. சோழ அரசர் செழிப்புற்றிருந்த காலத்தில் இது பெரிய கட்டிடஅமைப்புள்ள கோயிலாக விளங்கிற்று. இவ்வாலயத்தின் புகழ் தமிழ்நாடு எங்கும் பரவியிருந்தது. தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. சிறப்புமிகுந்த இக்கோயிலை போர்ச்சுக்கீசியர் இடித்துத் தரைமட்டமாக்கினர்.

இமயமலைக்கும் கன்னியாகுமரிக்குமிடையில் 1008 சிவாலயங்களும் இமயமலைக்குவடக்கில் 1008 சிவாலயங்களும் உள்ளனவென்று தக்கணகைலாச மான்மியம் கூறுகின்றது.

ஆதாரம்:
Hinduism outside India —
Swami Jagadiswarananda.

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கலங்க வைத்தது. கன்றைப் போன்று சாந்தியும் அழுவாளா? என்னை எதிர் பார்த்து ஏங்குவாளா? அந்தக் கன்றின் செய்கை பிளந்திருந்த என் மனதை மிகவும் துன்பப்படுத்தியது. திரும்பி வீட்டிற்குச் சென்றுவிடலாமா என்று ஒரு கணம் எண்ணினேன். 'குடும்பத் தொல்லைகள்' என்ற பயங்கரம் என்முன் வந்து பயம் காட்டியது. என் பாதையில் மீண்டும் தொடர்ந்தேன்.

நேரே பார்த்தேன், பனி படர்ந்த பாதை தெரிந்தது. அதைத்தவிர வேறொன்றும் தெரிந்தது. அது என்னைத் தலைகுனியச் செய்தது. நிமிர்ந்து பார்க்கவே அஞ்சினேன். அந்த ஏழைப் பிச்சைக் காரனும் அவன் குடும்பமும் என் கண்ணில் பட்டுவிடுமோ என்று பயந்தேன். "அவன் எப்படிவாழ்கிறான்! அந்தக் குடும்பத்தின் சுமைகளை எப்படித் தாங்குகிறான்? அவன் சுமைகளை விடவா என் சுமை அதிகமாகிவிட்டது? அவனுக்கு வறுமையில்லையா? மனைவி மக்களுக்கு எவ்விதம் உணவு அளிக்கிறான்? கேவலம், அவ உணர்ந்த அந்தப் பொறுப் புணர்ச்சி எனக்கில்லையா? துன்பங்கள்தான் அவனுக்கு இன்பமாக இருக்கின்றனவா? 'வீட்டிற்குத் திரும்புவதே' விடையாக உருவெடுத்தது என் உள்ளத்தில். இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது.

"வாழ்க்கை என்பது மலையேறுவது போன்றது. வழியிலே பனிப்புயல்கள் வரலாம், பயங்கரப் பள்ளங்கள் வரலாம். நிச்சயமாக பாதை ஒரே சீராக இராது. அதை எதிர்பார்க்கவும் கூடாது. பனிப்புயல்களையும், பயங்கரப் பள்ளங்களையும் கடந்து உச்சியைப் பிடிப்பதில்தான் வாழ்க்கையின் இன்பம்இருக்கிறது."

நான் வீட்டில் காலடி எடுத்துவைத்தேன். கூண்டிலிருந்து வெளிப்பட்ட கிளியைக் காகங்கள் கொத்திக் கலைத்துக் கொண்டிருந்தன. கிளியைப் பிடித்து மீண்டும் கூண்டில் அடைத்தேன். அது இனி வெளியுலகில்வாழமுடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். 'கூண்டு வாழ்க்கையே' அதற்குப் போதும். கிளியைக்கூண்டிற்குள் அடைத்துவிட்டுத்திரும்பிய பொழுது பூமா என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். அந்தச்சிரிப்புஎன் தொல்லைகளுக்கெல்லாம் விடுதலை அளித்தது. அவளை அப்படியே அணைத்துக் கொண்டேன். வாழ்க்கை இனித்தது! துறவு கசந்தது!


(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் போன்ற வாழ்க்கை

வாழ்க்கை பூரணமாக மலர்ந்து, இதழையும், மணத்தையும், தன் அனைத்தையும் தன்னைத் தோன்றச்செய்த தோட்டக்காரனுக்கு அளித்துவிடும் மலரை நிகர்த்து விளங்குவதாகுக! தன்னை அன்பொடும் ஆக்கியோனுக்குத் தன்னைச் சமர்ப்பித்தலே மலரின் இன்பம். அங்ஙனமே எங்கள் வாழ்க்கையும் எங்களை ஆக்கிய இறைவன் பாதங்களில் அர்ப்பணமாக்கும் மலராகுக! இங்ஙனம் வாழும் வாழ்க்கையே தூய்மையும் சாந்தியும் இன்பமும் நிறைந்து விளங்கும்.

— சுவாமி இராமதாஸ்.



# "பெண்களும் அழகும்"

-செல்வி ஜீ. நடராசா-

இயற்கையில் கிடைக்காத எத்தனை செல்வங்களை நாம் செயற்கை வழியில் செய்து நிம்மதியடைகிறோம். இவ்வகையில், இயற்கைதுணை செய்யாத இளநங்கையரும் தம்மை செயற்கை மூலம் அழகுபடுத்துவதில் தப்பில்லை. இதோ சில:-

கட்டையான பெண்கள்:- நீட்டுக்கட்டம் போட்ட பாவாடை சட்டையணிந்தால் உயரமாகக் காட்சி அளிப்பர். அதே போல்-

நெட்டையான பெண்கள் வரியுள்ள துணிகளை வட்டமாக வெட்டிஅதிகசுருக்கு வைத்துத்தைத்தால் கட்டையாய் காட்சியளிப்பர்

சிறிய நெற்றியுள்ள பெண்கள்:- பெரிதான பொட்டாக இட்டுக்கொண்டால், பெரிய நெற்றியாய்த் தெரியும்அதேபோல், பெரிய நெற்றியுடையவர்கள் இரண்டு பொட்டிட்டால்நெற்றிப்பொட்டுதொனிப்பதுடன் நெற்றியும் சிறியதாகத்தெரியும்,

குட்டையான பின்னலையுடையவர்கள் பின்னலைப் பதித்துப் பின்னி பெரியரிப்பனைக் கட்டினால்பெரிய பின்னலாகத் தெரியும்.

நீண்ட கழுத்துடையவர்கள் உயர் கழுத்துச் சட்டையணிந்து பின்னலைப் பதித்துப் பின்னலாம்.

தோளோடுள்ள கழுத்துள்ளவர்கள்: ஆழமாக வெட்டிய கழுத்துடைய சட்டையணிந்து உயர்த்திப் பின்னினால் எடுப்பாயிருக்கும்.

அது மட்டுமன்றி கறுத்த நிறமுள்ளவர்கள் முகத்திற்கு தடிப்பாக பௌடர் பூசி நெற்றியில் அதனிலும் சிறிது கூடிய பௌடர் பூசினால்நிறமாக இருப்பதுடன், முகத்தில் அதிக பௌடர் அப்பியதாகவும் தோன்றாது.




## குடும்பப்பெண்ணுக்கு

இல்வாழ்வை வளம்பெறச் செய்வதும், தாங்கமுடியாத துன்பச் சுமையாகச் செய்துவிடுவதும் குடும்பப் பெண்ணின் கையில் இருக்கிறது. தன் கடமையை உணர்ந்து அவள் செயல்பட்டால் வாழ்வு சிறக்கும். இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை.

ஃ

கணவனுக்குப் பிடிக்காத எதையும் செய்யக்கூடாது என்பதில் கவனமாக இருங்கள். இது சுதந்திரத்தைச் சற்றுப் பாதித்தாலும் சுமுகமான இல்வாழ்வு அமைய உதவும். இல்லற அமைதியெனும் சொர்க்கபோகத்தைப்பெற, இந்தச் சிறு தியாகம் இன்றியமையாத ஒன்றாகும். சுதந்திரத்தைப் பெரிதாக எண்ணினால் வாழ்வு நாசமாகிவிடும்.

-சரோஜினி சங்கர்

# தையற்கலை

— அ. கனகசூரியர் —

சோவியத் நாட்டு மக்கள் கலைகளில் மிகத் தொன்மையான தொன்றுதான் சித்திரத் தையல் வேலைப்பாடு. எல்லா மக்களும் இக்கலையை வழிபடுகிறார்கள். ஏனைய நாட்டு சித்திரத்தையல் வேலைப் பாடுகளிலிருந்து, சோவியத் நாட்டு தையற்கலை அதன் விசேடத் தன்மைகளால் மாறுபட்டுள்ளது

சில சித்திர வேலைப் பாடுகளை துணியில் உள்ள நூல் இழைகளின் எண்ணிக்கையைக் கொண்டு செய்கிறார்கள். மற்றும் சில கையால் வரைந்த படத்தின் மேல் போடப்படுகின்றன. முன் கூறப்பட்ட வேலைப்பாடு பலவருடங்களாக நிலவி வருவதாகும்.

இந்த வேலைப்பாடுகளில் சேவல்கள், விவசாயிகள் குழந்தைகள், விலங்குகள், பறவைகள், விமானங்கள், ஏன் அண்டவெளிக் கப்பல்களும் கூட இடம் பெறுகின்றன-

சித்திரத்தையல் வேலைப் பாடுகளுக்கு சோவியத்நாட்டின் கிராமப்புறத்தில் மாத்திரமல்ல பட்டணங்களிலும் மதிப்பு உண்டு!

—சோவியத்நாடு



இந்தப் பூச்சித்திரத்தை தலையணை உறை, மேசைச் சேலை மூலைக்கு வர்ண நூலால் தைத்தால் அழகாக இருக்கும்.

—செல்வி கோ. சிவஞானவதி

**குட்டிக்கதை**

## தாய்மை

தாயொருத்தி நன்றாகத் தூங்கிக்கொண் டிருந்தாள். மாலை 5 மணியளவில்தான் இருக்கும் நேரம். எல்லா அலுவல்களையும் முடித்துவிட்டு, குழந்தைக்கும் உணவளித்துத்தூங்கவைத்துவிட்டுத் தானும் நிம்மதியாகக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தாள்.

ஆபீஸ் அலுவல் முடிந்த கணவன் வீடு திரும்பிவிட்டான். மனைவியை எழுப்ப முயற்சித்தான். முயற்சி பலிக்கவில்லை. பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய பெண்ணின் சகோதரன் அடுக்களையில் பானை சட்டிகளைப் போட்டுடைத்துக் கொண்டு இருந்தான். பெண் விழிக்கவில்லை.

வீட்டிலிருந்து "வர்த்தக ஒலிபரப்பு" பாட்டுக்களை வானொலி அலறிக்கொண்டு இருந்தது. இச்சப்தத்திற்கும் பெண் விழிக்கவில்லை. அருகேயிருக்கும்புகையிரதப் பாதையால், புகையிரதம் கர்ணகொடூரமாகச் சப்தித்துக்கொண்டு சென்றது. இதற்கும் பெண் கண் விழிக்கவில்லை.

தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை சிறிதுகண்விழித்து 'அம்மா' என்றுஈனக்குரலால் அழைத்தது.

"இதோ வந்துவிட்டேனடா, கண்ணே" என்று ஓடிச்சென்று சேயைத்தூக்கி முத்தமிட்டாள் தாய்-

தாய்மை விழித்துக் கொண்டது.

—புலோலி கோபாலகிருஷ்ணன்

['விடிவெள்ளி' நினைவு மன்றம் சிறுவர்பூங்கா மூலம் மாணவர்களுக்காக நடாத்திய 'எதுவாழ்வு' என்னும் கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை.]

# நல் வாழ்வு எது?

மனிதன் அறிவு வளர வளரசிந்தனை சக்திவிரிவடைகின்றது. சிந்தனைசக்தி விரிவடைய ஒவ்வொரு பொருளையும் செயலையும் நோக்கும்போது, ஏன்? எதனால்? எது?- என்ற கேள்விகள் அகத்திரையில் அடிக்கடி தோன்றிய வண்ணமிருக்கின்றன. வாழ்க்கையைப் பற்றிச்சிந்திக்கும்போது, "எது வாழ்வு?" என்ற கேள்வி எழுகின்றது. அதன் பதில் இதுதான் அறவாழ்வு-நல் வாழ்வு.

அறநூல்கள் காட்டும் வழியில் வாழ்க்கைப் பாதையை அமைத்து உயர்ந்த பண்பாடு உள்ளவராகவும், சிறந்த குணங்கள் உள்ளவராகவும் வாழவேண்டும். மக்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதையே தமது வாழ்வின் இலட்சியமாகக்கொள்ளவேண்டும். உள்ளும் புறமும் தூயவராய் வாழ்வதேசிறந்தவாழ்க்கை.

உலகம்போற்றும்உத்தமர்கள் சொல்லும் நல்வழிகளிலே செல்வதே நமக்குச் சிறப்பு. தெய்வம் தொழுதல், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கல், உண்மை பேசுதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, வருவாய்க்கேற்ப சிக்கனமாகச் செலவு செய்தல், கடன்படாதிருத்தல் முதலியனவும் உயர்ந்த வாழ்க்கைக்குச் சிறந்தவித்துக்களாகும்.

பாடசாலையில் படிக்கும் பாடங்களையும் வாழ்க்கை முறைகளையும் பரீட்சை முடிந்ததும் மறந்துவிடக் கூடாது. கல்லூரியில் கற்கும் நல்லபாடங்களை வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும்.

பொய், களவு, சினம், சோம்பல், கவலை, வீண் விருப்பம், புழுக்கம், அச்சம், ஐயம் முதலியவற்றைத் தவிர்த்து நல்ல பழக்கவழக்கங்களைக் கைக்கொள்வது நல்லது. 'சுவர் இருந்தாற்றானே சித்திரம்வரையலாம்' அதுபோல வலிமையுள்ள உடலும், திறமையான அறிவும் இருந்தாற்றான் வளமாக வாழலாம். அதற்கு உடலினை உறுதி செய்துகொள்ளவேண்டும். நோய் நொடி வராமல் நம்மை நாமே பேணிக்கொள்ள வேண்டும்.

மனம் போன போக்கிலே செல்லாமல், மனத்தை நல்ல பாதையில் செலுத்தவேண்டும். "மனத்தை வென்றவர்கள் மகான்களாயிருக்கிறார்கள்". "ஒருவனின் ஒழுக்கத்திற்குத் தன்னடக்கமே அத்திவாரம்" என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

ஒவ்வொருவரும் முயற்சியுடையவராகவும், கூடி வாழும் தன்மையுள்ளவராகவும், யாரையும் மதித்து வாழும் தன்மையுள்ளவராகவும் வாழ்வது சிறப்பையும் சீரையும் தரும்.

வாழ்க்கை நல்லமுறையில் அமைய நல்ல நண்பர்களைத் தேடிக்கொள்ளவேண்டும் என்கின்றார் வான்புகழ் வள்ளுவன்.

"நவில்தொறும் நூல்நயம் போலும்
பயில்தொறும் பண்புடை-
யாளர் தொடர்பு"

என்பது குறள்.

உடம்பு, உள்ளம், உரை மூன்றிலும் தூயவராய்வாழ்வதோடு தோல்வியைக் கண்டு கலங்கக் கூடாது. தோல்வியே வெற்றியின் முதற்படி. நல்லவைப் புரியவேண்டும்; தீயவையைக் கண்டு அஞ்சவேண்டும்.

"நல்லதைச் செய்யத் துணி; தீயதைச் செய்ய அஞ்சு" என்பது ஆங்கிலப் பழமொழி.

"அறநூல்கள் எடுத்துரைக்கும்வண்ணம் வாழ்வாங்கு வாழவேண்டிய நெறிமுறைகளைப் பின்பற்றி தெய்வ சிந்தனை செய்தல், பெரியோரைக் கனம்பண்ணல், ... படித்தல், கீழோராயினும் தாழவுரைத்தல், கடமையைச் சரிவரச் செய்தல், பிறரிடம் அன்பு செலுத்துதல் முதலிய சிறந்த அம்சங்கள் உடையதே நல்வாழ்வு என்று சுருங்கக் கூறலாம்.

—சி. தில்லைநடராஜன்.

## விடிந்ததும்--!

காலைக் கதிரவன் ஒளி
கண்டு
காரிருள் ஓடி ஒளிவதுமேன்?
வாடிய கமலம் முகமலர
பாடிய ஆம்பல்
வாடியதேன்?

★

உறங்கிய மாந்தர்
விழிப்பதுமேன்?
ஊண், பொருள் தேடி
ஓடிடவோ?
ஆலய மணிகள்
ஒலிப்பதுமேன்?
ஆண்டவன் தன்னை
உணர்த்திடவோ?

—க. கனகலிங்கம்—

# சிறுவர் பூங்கா



## ஆட்டுக் குட்டி

--சிதம்பரபத்தினி--

ஆட்டுக்குட்டி எந்தன்
குட்டி
அருமையான ஆட்டுக்
குட்டி
வீட்டுக்குள்ளே வளருங்
குட்டி
வீரநடை போடுங்குட்டி.

பிறந்தபோதே நடக்கும்
குட்டி
பிரியமான ஆட்டுக்
குட்டி
கறந்தபாலைக் குடித்தி
டாதே
கர்வமான ஆட்டுக்
குட்டி.

என்னைப்போல வழுக்
குங்குட்டி
எளிமையான ஆட்டுக்
குட்டி
விண்ணும் மண்ணும்
தாவிவரும்
விந்தையான ஆட்டுக்
குட்டி.

புள்ளிப் புள்ளி ஆட்டுக்
குட்டி
புனிதமான ஆட்டுக்
குட்டி
துள்ளித்துள்ளி ஓடிவரும்
துரிதமான ஆட்டுக்
குட்டி.

## பூமி உருண்டையல்ல!

வானசாஸ்திர நூல் பரம்பரையாக நம்பிவருவது போல் பூமிசதா சுற்றியபடி இருப்பதினால் பந்து போல உருண்டையும் துருவங்கள் தட்டையாகவும் சமரேகையில் புடைப்புடையதாகவுமில்லை. பூமி சில பாரிய மேடு பள்ளமுடைய பேரிக்காய் (பியாஸ்) வடிவமுடையது. இது லண்டனில் பிரிட்டிஷ் றோயல் வான சாஸ்திர சங்கத்தால் நடாத்தப்பட்ட "ஸ்டட்டி லைட்டின்" புள்ளிவிபரத்திலிருந்துபூமியின்வடிவத்தை கண்டுபிடித்தல் என்னும்கூட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

சபாநாயகர்களில் ஒருவரான இங்கிலாந்து ஹம்ஷியர், பான்பரோ றோயல் எயர் கிறுப்ட்ஸ் ஸ்தாபனத்தின் திரு. டிகேகிங் ஹேல், பூமியை துருவத்திற்குத் துருவம் வெட்டினால் இதன் பேரியினக்காய் வடிவம்தெரியும் என ஒரு படத்தைக் காட்டி விளக்குகிறார். இதில் பேரியினக்காயின் தண்டில் நுனியான வட துருவம் சமரேகையிலிருந்து தள்ளியிருக்கிறது. தென் துருவம் மிக அருகிலிருக்கிறது.

ஆதாரம்: பிரித்தானிய
செய்திகள்,
அனுப்பியவர்: கு. இராஜ
கோபால், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...யும் சிகிச்சையும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வியாதியில் அரட்டல், புரட்டல் அதிகமாக இருக்கும்.

இந்த வியாதியைப் பேய், பிசாசு, சூனியம், ஏவல் சேஷ்டை என்று சொல்லி மந்திர தந்திரம் செய்து நோயாளியை மாற்றமுடியுமென்று கூறிச் சில பூசாரிகள் அந்நோயாளியை இன்னமும் உபத்திரவப்படுத்திப் பணமும்போய் வேறு நோய்களுக்கும் ஆளாக்குகிறார்கள். இதனால் இவ்வியாதியுடையவர்கள் பூசாரியின் கையிலகப்பட்டுச் சிக்காதீர்கள்.

### வைத்தியர்களின் ரோகநிதானம்

ஹிஸ்டீரியாவுக்கும், காக்கை வலிக்குமிருக்கிற வித்தியாசங்களைக்கண்டு கொள்ளவேண்டும். காக்கை வலியில் அறிவு இருக்கமாட்டாது. வியாதி ஒருவிதகூச்சலோடு ஆரம்பிக்கும். அது நின்றபிறகு அயர்ந்து நித்திரை பிறக்கும். வாயிலிருந்து நுரை வெளிப்படும். முகம் குரூரமடைந்திருக்கும். ஹிஸ்டீரியாவில் மேற்கூறப்பட்ட லட்சணங்கள் இராது. இதில் இருந்து பிரித்து அறியலாம்.

ஹிஸ்டீரியாக்காரர்களுக்கு அனுதாபம் மிகவும் அவசியம். ஊக்கமும் புத்தியும் அனுசரித்து அவர்களுக்குச் சிகிச்சை செய்ய வேண்டும், எது அவர்களுடையமனதை வாட்டுகிறதென்று கவனித்து அதை நீக்க முயல வேண்டும். அது நீங்கிவிட்டால் ஹிஸ்டீரியாச் சின்னங்கள் நிலைத்துநிற்கக்காரணம் இல்லை.

### சிகிச்சை

சன்னிகண்டிருக்கும்போது வஸ்திராபரணங்களைத் தளர்ச்சிசெய்து, காயம்படாமல் மனுஷியைப் பிடித்துக் கொண்டு நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் படுக்க வைக்கவேண்டும். உப்பினங்களில் ஏதேனும் ஒன்றை முகரவைக்கலாம். குளிர்ந்த சலத்தை சிரசிலும் மார்பிலும் ஊற்றவேண்டும்.

பெருங்காயம்-2 கழஞ்சு.

சடாமாஞ்சில் - 2 கழஞ்சு எடுத்து சமஎடை நீர் சேர்த்துக் கஸ்தூரி மிருத்தியாதி 2 குளிகைவிதம் காலை மாலை உரைத்துக் கொடுக்கவும். சன்னிநின்றபிறகு இலகுமலகாரிகைகளைக் கொடுத்து மலத்தை வெளியாக்கவேண்டும்.

ராத்திரியச் சூரணம் அல்லது திரிபலைச் சூரணம் அல்லது, சூரைத்தாவரையும்- கடுக்காயும் சேர்த்துஅவித்த குடிநீரையாகிலும் கொடுத்து மலத்தை வெளியாக்குதல் வேண்டும்.

நோயாளிக்கு இரத்தம் குறைந்திருந்தால் அயபஸ்பம் அல்லது மண்டூர செந்தூரம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை 1/4 குன்றி எடைப் பிரமாணம் ஓமத்திராவகத்தில் கலந்துகொடுத்தல் வேண்டும்.

இதன்பின்னர் காலைமாலை அயலேகியம் அல்லது காயகல்பலேகியம் முதலியவற்றில் ஒன்றைக் கொட்டைப் பாக்களவுகொடுத்தல்வேண்டும். இதனால்இரத்தவிருத்தி ஏற்படுவதோடு உடலும் பெலமடையும்.

நோயாளிக்கு மாதவிடாய் காலதாமதம் அடையாமல் இருப்பதற்கு நாகபற்பம் 1/2 குன்றியெடை வீதம் நாயுருவிச்சாற்றில் கலந்து கொடுக்கவும். இதனால் மாதவிடாய் காலதாமதமின்றி வெளியேறும்.

எப்பொழுதும்அறிவிகளின் ஓரங்களிலும்சந்தோஷமான விஷயங்களில் ஈடுபடுவதனாலும், மனதுக்கு இசைந்த பாடல்கள் முதலியவற்றைக் கேட்பதனாலும் இந்நோய் சமனம் அடையும். நோய் வராமல் பெற்றோர்களோ, உறவினர்களோ பாதுகாத்தல் வேண்டும்.


சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை

மித்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி P. O.


# பல்லவர் காலமும்......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பேயென்று ஒதுக்கியவர்க்கு பேய்க்கோலம் பூண்டு, காரைக்காலம்மையாரே ஆரம்பித்து வைக்கின்றார். ஒரு பெண் அளித்த ஆர்வத்தின் அடித்தளமாக பக்திக் கோலம் தலைதூக்கியது.

எதிர்ப்புக்களை முறியடிக்க வேண்டிய அவசிய நிலையில் அசற்கு இறைவனையே துணையாகக் கொண்டனர். இத்துறையில் நாயன்மார்களினதும் ஆழ்வார்களினதும் பணி குறிப்பிடத்தக்கது.

''பொய்த்த வன்தவ
வேடத்த ராஞ்சமண்
சித்தரை யழிக்
கத்திரு வுள்ளமே''

என்று சம்பந்தரும்,

''வெறுப்பொடு
சமணர் முண்ட
விதியில் சாக்
கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசிப்
போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையு மாகில்
கூடுமேல் தலையை
யாங்கே
அறுப்பதே கருமங்
கண்டா
யரங்கமா நகருளானே''

என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும் சைவ, வைணநெறிகளைத் தூற்றியவர்க்கெதிரான போராட்டத்தில் ஆண்டவனையே துணைக்கு அழைத்து நின்றார்கள்.

மானிட காதலுக்காகவும், மன்னரது போருக்காகவும் மடலேறிப்போரிட்டுஉயிரை மாய்த்த தமிழ்க்குடியை மூதாதையராகக் கொண்ட சமுதாயத்தவர்கள் அதே அடிப்படையில், தெய்வீகக் காதலுக்காக உயிரைமாய்த் திடத் துணிந்துநின்றனர்.

பக்தி இயக்கத்திற்காக மக்களே உயிர்மாய்க்கும் உணர்வுகொண்ட ஒரு மக்கள் இயக்கமாகவே அது அமைந்தது. மக்கள் வாழ்க்கையுடன் இணைந்த இயக்கமாக அமைந்ததற்கு பல காரணங்களைக் கூறலாம்.

மக்களின் மொழியிலேயே இறைவனைப் பாடிப் பரவக் கூடிய சந்தர்ப்பத்தை பக்தி இயக்கம் அளித்தது. மக்கள் தமது வாழ்க்கையின் இன்ப-துன்பங்களைத் தமிழிலேயே பாடி, இறைவனைக் குறை தீர்க்கும்படி இரந்தனர்.

தமிழர் தம் கடவுளர் ஆரிய கடவுளரோடு ஒன்றுபட்டாலும், தமிழ்மக்கள் தாம் தமிழர்கள் என்பதனை மறக்கவில்லை. இதனை ஞானசம்பந்தரின் பாடல்களில் ''நற்றமிழ் ஞான சம்பந்தன்'' எனவரும் தொடர்களால் அறியலாம். இறைவனைப் பரவுவது தமிழன் என்பது மட்டுமன்றி தமிழாலேயே இறைவனைப் பரவிப் பெருமை பெற்றதையும், பாடுவதும் தமிழ்தான் என்பதனையும்,

''திருத்தமார் திகழ்
காழி ஞானசம்பந்தன்
செப்பிய செந்தமிழ்''

என்னும் அடிகளால் மக்களுக்குணர்த்தினர்.

மக்களின் மொழியால் இறைவனைப் பரவும் போது மக்களின் அன்றாட வாழ்க்கையில் இடம்பெற்ற நாட்டுப்பாடலோசையையும் தேவார திருவாசகங்கள் கொண்டிருந்தபோது அது மக்களை மேலும் கவர்ந்தது. இசை, ஆடல்பாடல், தமிழ் ஆகியவை ஒன்றிய நிலையிலேயே பழந்தமிழர் சமயநெறி அமைந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நெறி சமண பௌத்த செல்வாக்கினால் நிலைகுலைந்தபோது அதை மீண்டும் நிலைநாட்ட ஏற்பட்ட இயக்கமே பல்லவர் கால பக்தி இயக்கமாகும். இதனைச் சேக்கிழாரே,

''மேதினிமேல் சமண்கையர்
சாக்கியர் தம் பொய்ம்
மிகுந்தே
ஆதி அருமறை வழக்கம்
அருகி அரன் அடியார்பால்
பூதிசாதன விளக்கம்
போற்றல் பெரு
தொழியக் கண்டு
ஏதமில் சீர்ச் சிவபாத
விருதயர் தாம்
இடருழந்தார்''

எனத் தமது திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிட்டார்.

(அடுத்த இதழில் முற்றும்)

## 'கைலாஸ்

இமயமலையைத் தன் தோள்களால் தூக்கிய இராவணனை, சிவபெருமான் தன் வலது கால் கட்டை விரலால் அழுத்தினபொழுது, நசுக்கப்பட்ட அரக்கன் 'ஐயோ கைலாஸ், கைலாஸ்' (கை+போச்சே) என்று கத்தினான்!

அதனால்அம்மலை உச்சிக்கு 'கைலாஸ்' என்றுபெயர் வந்திருக்கலாம்! திருவாசகமணி


உங்கள் இராசி பலன்
எழுதுவது
சோதிட ஆசான் செ.தெல்லியூர்
Colombo Studio


[8-8-66 — 14-8-66]

**மேட இராசி**
நண்பரால் உதவி. இடப்பிரிவு, நிலைமாற்றம், பிறர் சகாயம், சத்துரு ஜயம், ரோகபீடை, தேகநலிவு, அதிகாரம்.

**இடப இராசி**
செய்தொழில் ஏமாற்றம், குடும்பசுகம், தானியவிருத்தி, பூமிஇலாபம், பெண்களால் அவமானம், புதிய பதவி.

**மிதுன இராசி**
ரோகபீடை. கண், வயிற்றில்ரோகம்காணல், அக்கினி ஆயுதபயம், சத்துருக்களால் தீங்கு, பிரயாண கஷ்டம், தொழில்கேடு.

**கடக இராசி**
சயனசுகமின்மை, உடல் ரோகம், அவமான நிலைமை ஏற்படல், வீண் அலைச்சல், பொருள்முடை, வைத்தியச் செலவதிகரிப்பு.

**சிங்க இராசி**
வாக்குச்சித்தி, கமத்தொழில் இலாபம், ஊழியரால் தீங்கு, பலவழி பொருள் சேர்க்கை, செய்காரியசமசித்தி, அதிகாரிகள் ஆதரவு.

**கன்னி இராசி**
செய்தொழில் வெற்றி, வாக்குக் கலகம், இனபந்துக்கள் பகைமை. பொருள் சேதம், சயனசுகக்குறைவு, பிரயாணத்தடை.

**துலா இராசி**
பிரயாணத்தடை, பொருள் வீண் செலவு, அவமானச் சொற்கேட்டல், பெண்களால் இடர் விழைதல், களத்திர சுகம், அதிகாரம்.


**விருச்சிக இராசி**
இடப்பெயர்ச்சி, சத்துருக்களால்கஷ்டம், ரோகபீடை, ஊழியர் உதவி, கல்விச்சிறப்பு, பெண்தொல்லை, வீண் பழி.

**தனு இராசி**
ரோகபீடை, கண், வயிற்றில் ரோகம்காணல், குடும்ப கலகம், வாக்கு நட்டம், சத்துரு வெற்றி, சுகக்குறை, பொருள் முடை.

**மகர இராசி**
சத்துருபீடை, செய்காரிய சமசுகம், குடும்பத்தால் கவலை, தேகநலிவு, கொடுக்கல் வாங்கல் கஷ்டம், பெண்களால் பழி.

**கும்ப இராசி**
தார புத்திர கஷ்டம், குடும்ப, இனபந்துக்கள் பகை, மனச்சஞ்சலம், வாகன நட்டம், கடன்நிலை, இடப்பிரிவு.


**மீன இராசி**
அதிகாரிகள் தொல்லை, ரோகபீடை, குடும்பசுகம், தொழில் சமசித்தி, மனோ சஞ்சலம், பூமியால் நஷ்டம், பெண்வழித் தொல்லைகள்.


உடம்பினால் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. ஆதலால் தினசரி தேவைப்படும் சக்திக்கும் வலிமைக்கும், தினமும் ப்ரோட்டீன் அவசியமாகும்.

உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணவும், உடல் இழையங்களை உண்டாக்கவும், உடல் கலங்களை பழுது பார்க்கவும் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு வினாடியிலும் ப்ரோட்டீன் எரிக்கப்படுகிறது.

ப்ரோட்டீன் இல்லாவிடில் உங்கள் உடம்பு தன்னைத்தானே எரித்துக்கொள்ளும். இதன்காரணமாக நீங்கள் ஊக்கமிழந்து, சோர்வுற்று களைப்பாகவே இருப்பீர்கள்.




தினசரி தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு தினமும் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்

ப்ரான்ட்ஸ்
எஸன்ஸ் ஒப் சிக்கன்
சக்தியளிக்கும் சத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலட்சியங்களை நாம் கைவிடவில்லை"

யாழ்ப்பாணம், திங்

தமிழ் காங்கிரஸ் எந்த லட்சியங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதே லட்சியங்களைத்தான் கடைப்பிடித்து வருகிறதென்றும், தமிழ்மக்கள், தமிழ் காங்கிரஸைத்தான் நம்பியிருக்கிறார்களென்றும் நேற்று ஆரம்பமான காங்கிரஸ் மகாநாட்டில் திரு. ஜி. அருணாசலம் பேசும்போது கூறினார்.

கரைச்சி கிராம சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி கூறியதாவது: தமிழ்காங்கிரஸினால்தான் தமிழ்மக்களின் உரிமைகளைப்பெறமுடியும். கடந்த வருடத்திலும் பார்க்க காங்கிரஸின் வளர்ச்சி பன்மடங்குபெருகிவிட்டது. 58-ம் ஆண்டு காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா தந்த உரிமைகளை ஏற்க மறுத்துவிட்டு, அதிலும்பார்க்க குறைவான உரிமைகளைப் பெற்றுள்ளார்கள். இதனால் தமிழினம் திருப்தியடைந்து விடமுடியாது. தமிழ் காங்கிரஸினால்தான் முழு உரிமைகளையும் பெறமுடியும்.

திரு. எம். மோதிலால் நேரு பேசும் போது தமிழ் காங்கிரஸ் கடந்த 21 வருடகாலமாக தேசிய ஐக்கியத்திற்காகவும், சிங்கள தமிழர் ஒற்றுமைக்காகவும் பாடுபட்டுவந்தது என்றார்

முன்னாள் கிளிநொச்சி எம் பி திரு ஏ சிவசுந்தரம் பேசும்போது 60-ம் ஆண்டு மார்ச் தேர்தலின் பின் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிக்கும்படி நான் திரு. செல்வநாயகத்திடமும் மற்றவர்களிடமும் கூறினேன். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. நடுநிலைமை வகிக்கும்படி கூறினேன். அதற்கும் மறுத்துவிட்டனர். இன்று அதே ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரித்துள்ளார் அன்று ஆதரித்திருந்தால், நமது பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றிருக்காது. தமிழர்கள் கஷ்டப்படவேண்டி வந்திராது.

திருவாளர்கள் வி. குணரத்தினம், என். ரி. சிவஞானம், ஏ. கே. சுப்பிரமணியம், ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோரும் பேசினார்கள்.

அமெரிக்காவிலிருந்து உடுப்பிட்டி எம் பி திரு எம் சிவசிதம்பரம் அனுப்பிய வாழ்த்துச்செய்தியும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

கட்சித்தலைமைக்காரியாலயத்தில் சுமார் 500 பிரதிநிதிகளுக்கு சமபந்தி மதிய போசனம் அளிக்கப்பட்டது.

21-வது வருடாந்த மகாநாட்டைக் குறிக்கும்வண்ணம் தேசிய அரசாங்கத்தைச் சேர்ந்த 21 பேர்கள் இறுதி நாளில் கலந்து கொள்வார்களென்று வவனியா எம் பி திரு. ரி. சிவசிதம்பரம் தெரிவித்தார்.


REGAL—JAFFNA
NOW SHOWING
Cliff Robrtson
in
633 SQUADRON
(War Film) (Cinemascope-Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
PAPA'S DELICATE CONDITION
(Eastman Color)

மகாத்மா தியேட்டர்
(கரவெட்டி)
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
முதலியோர் நடித்த
"பூமாலை"

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
நடித்த
பணத்தோட்டம்


## காங்கிரஸ் மலர்

யாழ்ப்பாணம். திங்கள்

தமிழ்க்காங்கிரஸ் 21-ம் ஆண்டு மகாநாட்டை ஒட்டி ஒரு விசேஷ மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரில் காங்கிரஸ் சம்பந்தமான பல கட்டுரைகளும், கவிதைகளும் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## 20 குழந்தைகளை பெற்ற தாய்

கொழும்பு, ஞாயிறு

கல்லோயா குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த 46 வயதுள்ள இளநிகேயாபு என்பவர் அம்பாறை ஆஸ்பத்திரியில் தமது இருபதாவது குழந்தையை இவ்வாரம் பிரசவித்துள்ளார். தாயும் குழந்தையும் சுகமாகவிருக்கின்றனர்.

இப்பெண்ணுக்கு பத்து ஆண்குழந்தைகளும், ஐந்து பெண் குழந்தைகளும் உண்டு. நான்கு குழந்தைகள் பிரசவத்தின் பின்னர் இறந்தன. இவரது கணவன் கல்லோயா பள்ளத்தாக்கிலுள்ள விவசாயியாகும்.

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் போக்கு

கொழும்பு, ஞாயிறு

லங்கா சமசமாஜகட்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏமாற்றிவிட்டதா? இதுதான் இப்பொழுது லங்கா சமசமாஜ வட்டாரங்களில் அடிபடும் கேள்வியாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் நெருக்கமான முறையில் இணைந்து செயலாற்றுவதென்ற லங்கா சமசமஜ கட்சி அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. ஆனல் இந்த அழைப்புக் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கருத்து எதுவும் வெளியிடாமல் மௌனம் சாதிப்பது லங்கா சமசமாஜ வட்டாரங்களிடையே இப்பொழுது ஒரு பரப்பபை ஏற்படுத்தியுள்ளது.

## வல்வெட்டித்துறையில்
# ரூ. 60,000 அபின் கைப்பற்றப்பட்டது
### சந்தேகத்தின் மீது கைதான பெண் 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவு

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை பொலிஸ்பகுதியிலுள்ள கெருடாவில் என்னுமிடத்தில் அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான எண்பத்திரண்டு ருத்தல் அபினை பருத்தித்துறைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கெருடாவிலில் பொன்னர் பொன்னம்மா என்பவரது வீட்டை பருத்தித்துறை பொலிஸைச் சேர்ந்த சர்ஜண்ட் ஜோசப் அருளாநந்தம் தலைமையில் சென்ற கோஷ்டி சோதனையிட்ட பொழுது இந்த அபின் கண்டு பிடிக்கப்பட்டது

இதுசம்பந்தமாக சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்ட பொன்னம்மா என்பவர் இன்றுகாலை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு றுபார்ட் சில்வா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபொழுது சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல் விசாரணையை இம்மாதம் இருபத்தோராம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அபின் முழுவதும் பறிமுதல்செய்யப்பட்டது.

## கிராம சேவகர் வீடு தீக்கிரை

அக்கரைப்பற்று, வெள்ளி

தம்புலுவில் முதலாம் குறிச்சியைச் சேர்ந்த கிராம சேவகர் ஒருவரின் வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகியது அன்று மற்றொருவரின் வீடும் தீக்கிரையானது, இதுசம்பந்தமாகப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

## பிரிட்டிஷ் ஏற்றுமதியை அமெரிக்கா தடுத்தது

லண்டன், ஆகஸ்ட் 6

பாகிஸ்தானுக்கு இங்கிருந்து அனுப்பப்படவிருந்த ஏற்றுமதி ஒன்றை இங்குள்ள அமெரிக்கத் தூதரகம் தடுத்து நிறுத்தியுள்ளது. அந்த ஏற்றுமதி பாகிஸ்தானிலிருந்து மீண்டும் கியூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்படலாமென அமெரிக்கா சந்தேகித்துள்ளது.

(பி. டி. ஸி.)

## வரி விளம்பரம்

### தேவை

வாலிபர்:

இன்றிலிருந்து தொழிலற்ற வாலிபர்கட்கு நிரந்தர வேலைவாய்ப்புண்டு. 18-8-66 க்குமுன் நேரிலோ தொழிற்கந்தோர் மூலமோ வருக. டாக்டர் சி. அ. அம்பலவாணர், 51, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 818

### ஞாபகார்த்தம்

குமுதினி இராசரத்தினம்

தோற்றம்: 11-4-63. மறைவு: 8-8-65. அன்புச் செல்வமே! நீர் எம்மைவிட்டுப்பிரிந்து ஓராண்டுகாலம் எம்முள்ளத்தை மெல்ல மெல்லத் திருகிப் பிழிந்து கழிந்துவிட்டது. நீர் எம்மை விட்டுப்பிரிந்த அதிர்ச்சி இன்னமும் தீரவில்லை. உமது மழலைமொழி காதில் இன்னும் ஒலிக்கிறது. எம்முள்ளத்தில் என்றும் நீர் நீங்காது வாழ்கின்றீர். உம்மைக் காண, கண்டு தழுவத் தவிக்கிறோம். உமது புத்திக் கூர்மையும், அழகும் கண்ணில் பட்டுக்கொண்டதால் உம்மைத் தன்னருகே அழைத்து வைத்துக்கொண்டிருக்கும் அதே இறைவன் அருளால் எமக்கு நீர் மீண்டும் மிக விரைவில் வருகை தருவீர் என மனப்பூர்வமாக நம்புகிறோம். உமது பிரிவால் வாடும் ஐயா, அம்மா, தம்பி, அப்பா, அம்மம்மா, அப்பாச்சியும் மற்றோரும். கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. 831

### விற்பனைக்கு

காணி

வல்வெட்டித்துறை-உடுப்பிட்டி ரோட்டில், வல்வெட்டியில் ''பாவந்தோடம்'' என்றழைக்கப்படும் காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும். சி. கதிரவேற்பிள்ளை, டில்கா, யாழ்ப்பாணம். 828

காணி

நவாலி வடக்கு அரசினர் பாடசாலைக்கு அருகாமையில், விதானை வளவு எனப்படும் வீடுகட்டும் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 33. முழுதாகவோ, பங்குகளாகவோ பிரித்துக் கொடுக்கலாம். விபரங்கட்கு கீழ்க் காணும் விலாசத்தில் விசாரிக்கவும். T. P. பொன்னை. 64, கச்சேரி - நல்லூர்வீதி, யாழ்ப்பாணம். 830

காணி

அச்சுவேலிப் பிள்ளையார் கோவில் முன் ரோட்டுக்கு வடக்குப் பக்கமாகவும், கோவிலுக்குக் கிழக்காகவும் தென்னை வைக்கக்கூடிய 15 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு S. கந்தையா, பெரியவளவு, புலோலி கிழக்கு அல்லது S. திருவிளங்கம் அச்சுவேலி வடக்கு. 810

### கல்வி

புதிய பிரவேசங்கள்

பொதுக் கலை தராதரம், ஜி. ஸி. ஈ. உயர்தரம், கலை / விஞ்ஞானம், ஜி. ஸி. ஈ. சாதாரணம் / கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகிய வகுப்புகளிற் புதிய பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகளுண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 824

வகுப்புகள்

ஜி. ஸி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் முதலிய வகுப்புகளுக்கு இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. விடுதி வசதியும் உண்டு. ஐக்கியகலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 825

வகுப்புகள்


மாணவ ஆசிரியர்; பொதுச் சௌக்கிய பயில்வோர் ஆகிய வகுப்புக்களுக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உடன் சேருங்கள். யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி, கைலாச பிள்ளையார் கோயிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம். 823


11-ந் திகதி வியாழன் முதல்
கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
சிவாஜி, எஸ். எஸ். ஆர்,
எம். ஆர். ராதா, பாலையா, முத்துராமன்,
நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
நடித்த
பாரதமாதா பிக்ஸர்ஸ்
பழநி

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
லவகுச



கார், லொறி, றெக்டர்,
லோஞ், தண்ணீர்பம்
முதலியவற்றிற்கு
றீபோரிங், றீசிலிவிங்,
வால்(f) சீற் அடித்தல்,
வால்(f) சீற் வெட்டுதல்,
வால்(f) பேஸ் பண்ணுதல்
முதலியவற்றிற்கும்
கார், லொறி, றெக்டர்
ஆகியவைகளுக்கு
விசேஷ யந்திரங்கள் மூலம்
பிறேக் றம், பிறேக் லைன்,
கிளச் அசெஸ்மென்ட்
செய்வதற்கும்
மற்றும்
சகல விதமான
கடைச்சல்-புரி வெட்டுதல்
போன்ற வேலைகளுக்கும்
எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்!




நோத் என்ட் மோட்டார் வேக்ஸ்
(ஓட்டோமோபயில் என்ஜினியர்ஸ்)
291, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.
(அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டடம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுல பள்ளியில்

# சைவப்பிள்ளைகள் எல்லாரும் சேர்த்துக்கொள்ளப்படும்

## ஆலோசனைச்சபை முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

திருக்கேதீச்வரம் சிவானந்த குருகுல சபையின் ஆதரவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பள்ளிச்கூடத்தில் பிராமணப்பிள்ளைகளுடன் சைவப்பிள்ளைகளும் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கிறார்கள்.

நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற திருக்கேதீச்வரம் சிவானந்த குருகுல ஆலோசனைச்சபைக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

பள்ளிக்கூடத்தை ஆவணி முதற்கிழமையில் ஆரம்பிப்பதென்றும், இப்பள்ளிக்கூடத்தில் சேரவிரும்பும் மாணவர்களை இம்மாதம் 18-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கும்படி கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. விண்ணப்பத்துக்குரிய பத்திரங்களை காரியதரிசி திரு. க. சிவலிங்கத்திடம் பெற்றுக்கொள்ளலாம். இப்பள்ளியில் படிப்பிப்பதற்காக திறமையான ஆசிரியர் ஒருவர் ஆவணி மூன்ருந்திகதி இங்குவந்து சேரவிருப்பதாகவும் தெரிகின்றது.

அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள், கொக்குவில் த. குமாரசுவாமிபுலவர், சுன்ஞகம் த. சிவானந்தம் ஆகியவர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்

இக்கூட்டத்தில் நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா பேசும்போது, சைவத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டே இந்தச்சபை இயங்குகின்றது என்றும் இதன்மேலான நோக்கங்கள் நிறைவேற சைவ மக்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# தமிழர் வாழ்வில் ஒளி;

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் இந்துப் பல்கலைக்கழகமும் இயங்கும். ஆரம்பக் கல்வியும் இரண்டாந்தரக் கல்வியும் சமய அடிப்படையில் சமய சூழலில் இருக்க வேண்டும் ஒன்பது அங்கீகரிக்கப்பட்டல்லித்திட்டம். நாதித்த பட்டதாரிகளை உருவாக்காமல் நாம் தடை செய்யவேண்டுமானுல் உயர் கல்வியிலும் சமய அடிப்படைக் கொள்கையைக் கடைப்பிடிப்பது அவசியமாகக் கருதப்படல்வேண்டும்.

இந்த வருட வரவு—செலவுத் திட்டத்தில் இராமநாதன் பல்கலைக்கழகம் ஸ்தாபிப்பதற்கான அடையாள மான்யம் சில புரியாத காரணங்களுக்காக ஒதுக்கப்படவில்லையென்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உடனே பிரதமரிடமும், கல்வி மந்திரியிடமும் இதுபற்றி எடுத்துக் கூறினேன். அவர்கள் இதற்கான மான்யம் வரவு செலவுத் திட்டம் ஷரத்து வாரியாக பரிசிலனைசெய்யப்படும்போது ஒதுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர். அடையாளமான்யத்துடன் அரசாங்கம் நிறுத்திவிடாது இந்துப்பல்கலைக்கழகம் விரைவில் உருவாகுவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமென நம்புகிறேன்.

சமூக ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்காக உறுதிபூண்டிருப்பதாகவும் இதையடைய சட்டமியற்றுமாறு அரசாங்கத்தைக் கேட்பதாகவும் திரு. பொன்னம்பலம் தமது தலைமை உரையில் கூறினர்.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க குறுகியகாலத் திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென்றும் காங்கேசன்துறைத் துறைமுக விருத்திக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது கண்டு மகிழ்ச்சியடைவதாகவும் கைத்தொழில் விருத்தியில் அக்கறை செலுத்த வேண்டுமென்றும் ஆனையிறவில் உப்பளத்தை விஞ்ஞான ரீதியில் விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் திரு பொன்னம்பலம் கேட்டுக் கொண்டார்.

சீனித் தொழிற்சாலை

வவனிக்குளம் கரும்பு உற்பத்திக்கு மிக உகந்த இடமென நிபுணர்கள் தெரிவித்துள்ளார்களென்றும் இங்கு கரும்பு உற்பத்தியை ஊக்குவித்து சீனித்தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடித்துறையை அபிவிருத்திசெய்ய நவீன வசதிகள் அளிக்கப்படவேண்டுமென்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சேமநலத்திட்டம், கடன்வசதிதிட்டம் போன்ற வசதிகள் அளிக்கப்படவேண்டுமெனவும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயிரிடப்படாத நிலங்களில் பயிர்ச்செய்கைக்கு வழிசெய்யுமுகமாக இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து கிடைக்கும் உதவி பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் அரசாங்கத்தை வற்புறுத்தினர்.

மகாவலிகங்கை

திட்டம்

நீர் தேக்கி வைக்கப்படுவதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் இங்கு கிடைக்கும் ஒரு துளி நீரும் வீணுகாதவாறு தேக்கி வைப்பதற்கு குறுகிய நீண்டகால திட்டங்கள் உருவாக்கப்படவேண்டுமென்றும், இந்த நீண்டகாலத் திட்டத்தில் மகாவலிகங்கையை வடக்கே திருப்பும் திட்ட[illegible]றெனவும் திரு. பொன்னம்பலம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

### தேவை

நெசவுவேலையில் அனுபவமுள்ளபெண்களும் போதனுசிரியையும் தேவை. 217/1 கடையிற்சுவாமி கோயில் ஒழுங்கை, நீராவியடி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 834

### விற்பனைக்கு

வீடுவளவு

சுன்ஞகம் கே. கே. எஸ். ரோட் மார்க்கட்டுக்கு முன்பாக மூன்றுவீடுகளும் அத்துடன் சேர்ந்த பன்னிரண்டு (12) பரப்புக்காணியும் பிரித்தும் கொடுக்கலாம். விரும்புவோர் விண்ணப்பிக்கவும். C/o ஈழநாடு. 817

### ஜி.ஜி பொன்னம்பலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீரசிங்கி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைக் காரியதரிசிகளாக திருவாளர்கள் ரி சங்கரப்பிள்ளை, எஸ் ராஜநாயகம், ரி பரமானந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். விளம்பர பிரசாரகர்சளாக திருவாளர்கள் எம் மோதிலால்நேரு, ஆர் விஸ்வநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். உதவிச்செயலாளர்களாக எஸ் செல்வநாயகம், ரி ரி யூசுப், ஏ அன்ரனி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டுத் தனாதிகாரிகளாக திருவாளர்கள் ஆர் திருநாவுக்கரசு, நடராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் 25 பேர் நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

நேற்றிரவு யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

### இரண்டு வைபவங்களில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னைச் சந்திக்கவேண்டும் என்றும் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலுக்கு தன்னுடன் வரவேண்டுமெனவும் பிரதமர் என்னைக் கேட்டிருக்கிருர். பிரதமரின் வேண்டுகோளின்படியும் நல்லூர்த்தொகுதி மக்களின் விருப்பத்தின்படியும் பிரதமர் நல்லூர்த் தொகுதிக்கு வரும்பொழுது கைலாசபிள்ளையார் கோயிலிலும் கந்தசாமி கோயிலிலும் நான் அவரை வரவேற்பேன். ஆகவே எமது ஆதரவாளர்கள் இவ்விரண்டு இடங்களிலும் பெருந்திரளாகவருகை தந்து பிரதமருக்கி வரவேற்பளிப்பதில் கலந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

# தமிழ்க் காங்கிரஸ் மகாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி மகாநாடு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். வாலிப முன்னணி தலைவர் திரு. ரி. சிவசிதம்பரம் தலைமையில் இம்மகாநாடு ஆரம்பமாகும்.

இணைச் செயளாளர் ஆ. நா. இராசநாயகம் வரவேற்புரை நிகழ்த்துவார். காலை 9-30 மணிக்கு, திரு. ரி. சிவசிதம்பரம் தலைமைப் பேருரை நிகழ்த்துவார்.

திருவாளர்கள் எம். மோதிலால் நேரு, வி. ஸ்ரீகந்தராசா, மு யோகலிங்கம், எம். எல். சுந்தரம், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். காலை 11-15 மணிக்கு புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு மாதர் மகாநாடு நடைபெறும்.

திருமதி சுவாமிநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார். தி மதி ரி. சங்கரப்பிள்ளை தலைமையுரை நிகழ்த்துவார். சொற்பொழிவுகள், சங்கீதம், நடனம் நடைபெறும்.

இன்று பிற்பகல் 1-30 மணிக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தேசிய தொழிற் சங்க சம்மேளன மகாநாடு ஆரம்பமாகும். திரு. என். ரி சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இதன்பின் சம்மேளனப் பொதுப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும்.

பல சங்கங்கள் சார்பில் சொற்பொழிவுகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில், மாலை 6-00 மணிக்கு கலைவிழா நிகழ்ச்சிகள். நடைபெறும்.

### மந்திரி பிலிப் பார்வையிடுவார்

இனிதொச்சி, ஞாயிறு

கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன வருகிற புதன் கிழமை காலை இனிதொச்சி எம். பி. திரு கா. பொ. இரத்தினத்துடன் சென்று ஆனையிறவு உப்பளம், பரந்தன்ரசாயனத்தொழிற்சாலை ஆகியவற்றைப் பார்வையிடுவார்.




### கொழும்பு

ஞாயிறு 8 - 8 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள் 7-30 குரல்வகை, 7-45 தமிழோடிசைபாடல், 8-15 ஞானமிர்தம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 முத்திநெறி, 9-00 முஸ்லிம் சமய பாடசாலை, 9-30 தேர்ந்த இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்தி விருந்து.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இசைக் கச்சேரி, 7-45 கலை ஏடு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர் விருப்பம்.

# கூடிவாழ்ந்தே உரிமைபெறலாம்; இதுவே எங்கள் இலட்சியம்

## தந்தையை அழைத்த நாமே தனயனையும் அழைக்கின்ருேம்

### திரு. சிவசிதம்பரத்தின் வரவேற்புரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனம், பெரும்பான்மை இனத்துடன் சகோதரத்துவம் பூண்டு, அன்பாலும் சௌஜன்யத்தாலும் எமதுஉரிமைகள் அத்தனையையும்பெற்று தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்பதே அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் அன்றைய இலட்சியமும் இன்றைய இலட்சியமுமாகும். இதை எள்ளி நகையாடியவர்கள் கூட இன்று இந்த இலட்சியத்தை ஏற்றுக் கொண்டுள்ளதைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகின்ருேம்.''

இன்று காலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் ஆரம்பமான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் 21-வது மகாநாட்டில் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற்று பேசிய வவனியா எம். பி. யும் மகாநாட்டுவரவேற்புக்குழுத் தலைவருமான திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. சிவசிதம்பரம் தமது வரவேற்புரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் 21வது ஆண்டு மகாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு என் தொகுதி சார்பாகவும் எனது சார்பாகவும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வரவேற்கும் பெரும்பாக்கியம் எனக்கு அளிக்கப்பட்டதை என் தொகுதி மக்களுக்கு அளித்தபெருமையாகக் கருதுகிறேன்

எமது தமிழ்த் தலைவர்களே மகாநாட்டுப் பிரதிநிதிகளே செயற்குழு உறுப்பினர்களே உங்கள் அனைவரையும் மனம் குளிர வாயார வரவேற்கிறேன்.

இன்றையதினம் எமது மகாநாடு அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் முக்கியமானதல்ல. இலங்கைவாழ் தமிழ்பேசுமினம் அத்தனைக்குமே முக்கியமும் சுதந்திரப் பொலிவும் நிறைந்ததோர் தினமாகும். சென்ற பத்து ஆண்டுகாலம் அரசியல் சூருவளியில் சிக்கிச் சிதறிய தமிழ்பேசும் இனத்திற்கு இன்றையதினம் ஒரு மறுமலர்ச்சித் தினமாக அமைகின்றது.

### இன்று வெற்றி விழாநாள்

1950-ம் ஆண்டு இந்நாட்டின் முதற் பிரதம அமைச்சரை, இன்றைய முதலமைச்சரின் தந்தையை வடபகுதிக்கு அழைத்தது எமதுகட்சியும் எமது கொள்கையும் எமது தலைவரும்தான். 1966-ம் ஆண்டு இந்நாட்டின் பிரதமரை வட இலங்கைக்கு அழைத்திருக்கிறோம். வருகைதர இசைந்துள்ளார்.

### கோவில் குருக்களுக்கு பொலிஸார் பாராட்டு

சாவகச்சேரி, ஞாயிறு

பல கோவில்களில் திருடிய ஓர் இளைஞரைப் பிடித்துக் கொடுப்பதில் பொலிஸாருக்கு உதவின கோவில் குருக்கள் ஒருவருக்குப் பொலிஸ் அதிகாரி பாராட்டுதல்கள் தெரிவித்துள்ளார்.

மறைவன்புலத்திற்கு அருகிலுள்ள கைதடி-நாவற்குழி என்னும் பகுதியிலுள்ள முருகமூர்த்தி கோவிலைச் சேர்ந்த சோ. குமாரசாமிக் குருக்களுக்கு இதுசம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸ் அதிகாரி பாராட்டு ஒரு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்.

க. இராசநாயகம்என்னும் இளைஞர் பல இடங்களில் உள்ளகோவில்களில் திருடியதாகவும், அவரைப் பொலிசார் தேடிவந்ததாகவும் கூறப்பட்டது. ஓர் இரவு இவர் முருகமூர்த்தி கோவிலில் திருட முயன்றபோது கோவில் குருக்கள் பார்த்து சிலரது உதவியுடன் இளைஞரைப்பிடித்து சாவகச்சேரிப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலவ்கோவில் மேலே வீதி. 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு, வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org